Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 27 12-09-94 திங்கட்கிழமை ஓசை 206

## பாடசாலை அனுமதி முறையில் திருத்தங்கள் செய்ய முடிவு

பாடசாலைகளுக்கு ஆரம்ப வகுப்பு முதல் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக சில திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகவும் இதுபற்றி விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாகவும் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரான தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், இலவச பாடநூல்கள் விநியோகத்தில் பல குறைபாடுகள் நிலவுகின்றன. தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு உரியகாலத்தில் பாடநூல் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை. இக்குறைபாடு (6ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாகரன் தீரத்தை, மனோதிடத்தை கண்டறிய தமிழர் வரலாற்றில் அதிக தூரம் செல்ல வேண்டும்!

### லண்டன் ஹூசிய நகர மேயர் சின்னமணி

(கொழும்பு)


புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது போராட்டத்தினால் சுயகௌரவத்தைத் தேடிக் கொண்டுள்ளார். பிரபாகரனின் தீரத்தையும் சலிக்காத மனோதிடத்தையும் கொண்ட ஒருவரை கண்டு பிடிப்பதற்கு தமிழ் வரலாற்றில் அதிக தூரம் செல்ல வேண்டும். பிரபாகரனை கொழும்பிலுள்ள அரசியல்வாதிகளே உருவாக்கினர். இவ்வாறு யாழ்ப்பாணம் சென்று திரும்பிய லண்டன் ஹூசியநகர மேயர் சின்னமணி கொழும்பு பத்திரிகை ஒன்றிற்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், புலிகள் யாழ்ப்பாணத்தை நிர்வகிக்கும் முறை என்னை வியப்பில் ஆழ்த்தியது. பல நெருக்கடிகளின் மத்தியில் புலிகள் நீதி, ஒழுங்கு, கட்டுப்பாடு கொண்ட நிர்வாகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தியுள்ளனர். அவர்களின் நிலைமைகளில் பாரிய மாற்றமொன்றைக் கொண்டு வந்துள்ளனர். மக்கள் சுய கௌரவத்துடன் வாழ்கின்றனர். பெண்கள் சுதந்திரமும் அங்கு காணப்படுகிறது.

சந்திரிகாவின் ஒவ்வொரு நல்லெண்ண நடவடிக்கைக்கும் புலிகள் தமது பூரணமான ஒத்துழைப்பை நல்குவார்கள் என நான் நம்புகிறேன் யாழ்ப்பாணத்தில் நான் தங்கியிருந்த நாட்களில் பாடசாலை அதிபர்கள், யாழ் ஆயர், முன்னணி வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோரை நான் சந்தித்தேன்

புதிய அரசாங்கம் குறித்து யாழ்ப்பாண மக்கள் மிகவும் யதார்த்த பூர்வமாக சிந்திப்பவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு முன்னர் சிங்களத் தலைவர்கள் தமது வாக்குறுதிப்படி நடக்கவில்லை எனவே அவர்கள் இந்த சமாதான நடவடிக்கைகளைச் சந்தேகக்கண்கொண்டே பார்க்கின்றனர். எனினும் சந்திரிகாவைப்பற்றி அவர்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயம் உள்ளது.

சமாதானம் என்பது ஒரே நாளில் ஏற்படக்கூடியதொன்றல்ல அது கட்டம் கட்டமாக நிறைவேற்றப்பட வேண்டியது ஆனால் அதன் முதற்கட்டம் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். காலவரையறையற்றயுத்தநிறுத்தம் மூலமும்வடக்குக்-கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் மீன் பிடிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை (6ஆம் பக்கம் பார்க்க)



# ஆனையிறவு பாதையை திறக்கவே விரும்புகிறோம்!

# ஜனாதிபதியாக தெரிவானாலும் ஜனாதிபதி முறையை ஒழிக்க ஆதரவு

### காமினி திசாநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்கா தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டாலும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்க முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தான் முற்றுமுழுதாக ஆதரவளிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட பின்பு அவர் மேலும் கூறுகையில்: (6ஆம் பக்கம் பார்க்க)

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

வடபகுதி மக்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதை

### மூவர் காயம்

(தென்மராட்சி)

லொறியின் மேல் இருந்து பயணம் செய்த மூவர் தவறுதலாக விழுந்ததில் படுகாயம் அடைந்தனர்.

# மக்களின் போக்குவரத்து கப்பல் கடற்படையினரின் பாவனையில்

(கொழும்பு)

வடபகுதி மக்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதை உறுதிப்படுத்தவும் வடக்கிற்கு பொருள்களை இலகுவாக கொண்டு செல்லவும் வசதியாக கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதற்குப் பதிலாக ஆனையிறவுப் பாதையை திறப்பதற்கு அரசாங்கம் விரும்புகிறது. இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஆனையிறவுப் பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அபிப்பிராயத்தை அறிந்த பின்னரே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை நீர்ப்பாசன தலைமை அலுவலக கட்டடத்தில் பத்திரிகையாளரைச் சந்தித்த இவர், வடபகுதிக்கு பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு ஆனையிறவுப் பாதையே சிறந்தது. கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதை திருத்தப்பட வேண்டியுள்ளது

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி நெருக்கடிகளை நீக்குமாறு பிரதமரிடம் ஆயர் குழு கோரிக்கை

(கொழும்பு)

வடபகுதி மக்கள் மீதான பொருளாதாரத் தடை, போக்குவரத்துத்தடை, எரிபொருள் தடை, மீன்பிடித் தடை போன்றவற்றை நீக்கி அப்பாவிப் பொதுமக்கள் மீதான விமான, ஷெல் தாக்குதல்களை நிறுத்தி, இடம்பெயர்ந்தவர்களை சொந்த இடங்களிற்கு திரும்ப ஆவன செய்யுமாறு புதிய பிரதமரை ஆயர் குழு கேட்டுக் கொண்டது.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் இராயப்பு யோசப் அவர்கள் புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவை சந்தித்த போது மேற்படி கேட்டுக் கொண்டனர்.

கடந்த மாதம் ஆயர் சங்க மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்றிருந்த யாழ்ப்பாணம், மன்னார் ஆயர்களை பிரதமர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களையும் புலிகளையும் பிரித்துப் பார்க்க முடியாது

## யாழ். ஆயர் பிரதமரிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் தமது நீதிக்கான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் ஒன்றே அவர்கள் இருவரையும் ஒருவரிடத்தில் இருந்து ஒருவரைப் பிரித்துப் பார்க்கமுடியாது,

இவ்வாறு யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க வடபகுதியில் புலிகளை மக்கள் ஆதரிக்கின்றார்களா என்று கேட்டதற்கே ஆயர் மேற்படி பதிலளித்தார்.

கடந்தமாதம் ஆயர் சங்க மகாநாட்டிற்கு சென்ற யாழ்ப்பாணம், மன்னார் ஆயர்களை சிறிலங்காவின் புதிய பிரதமர் சந்தித்து உரையாடியபோதே மேற்படி தெரிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பௌத்த பேரினவாதிகள் என்று ஒரு சிறு பகுதியினரே இன்று காணப்படுகின்றனர். அவர்கள் தமது சொந்த இலாபத்திற்காகவே செயற்படுகின்றனர். எம்மத்தியில் இருந்த ஒரு சில இனவாதிகளையும் நாம் தூக்கி வீசிவிட்டோம்.

(6ஆம் பகசம் பார்க்க)

லொறியின் மேல் இருந்து பயணம் செய்த மூவர் தவறுதலாக விழுந்ததில் படுகாயம் அடைந்தனர்.

கிளாலிப் பகுதியில் இருந்து நேற்று பொருட்களை ஏற்றிச் சென்றபோதே லொறியில் இருந்து விழுந்ததாக தெரியவருகின்றது. இவர்கள் மூவரும் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(86)

# ராணுவப் பிடியில் இருந்து ஆறுபேர் விடுவிப்பு

(வடமராட்சி)

இளவாலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களில் இருவரும் இடைக்காட்டில் கைது செய்யப்பட்ட நால்வரும் பலாலி இராணுவ முகாமில் வைத்து விடுவிக்கப்பட்டு நேற்று யாழ், வந்து சேர்ந்தனர்.

கடந்த வெள்ளிக் கிழமை இடைகாட்டில் தம் வீடுகளை பார்வையிட்டு சுத்தம் செய்து கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்களான மார்க்கண்டு கந்தசாமி (வயது 50), சுப்பிரமணியம் கமலநாதன் (வயது 48), பெரியதம்பி முருகமூர்த்தி (வயது41) ஆகியோரும் 1992 ஆம் ஆண்டு இளவாலைச் சுற்றிவளைப்பின்போது கைது

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சோதனை சாவடிகள் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னாரிலிருந்து தலைமன்னார் செல்லும் பாதையில் சிறிலங்கா இராணுவத்தின் சோதனைச் சாவடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் பயணிகள் பெரும் கஷ்டங்களுக்கு இலக்காகி வருகின்றனர். ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் நான்கு மணி நேரங்களுக்கு மேல் பொது மக்கள் செலவிட நேரிடுவதாகக்கூறப்படுகிறது.

# கடற்படையினரின் பாவனையில்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கு என வாடகைக்கு அமர்த்தப்பட்ட வலம்புரி கப்பல் தற்போது கடற்படைத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் பொது மக்களின் பாவனைக்கு என பெறப்பட்ட மேற்படி கப்பல் தற்போது பீரங்கிகள் பொருத்தப்பட்ட நிலையில் கடற்படையினர் தமது தேவைக்கு பயன்படுத்தி வருவதாக அத் தகவல்கள் மேலும் தெரிவிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பயணிகளிடம் அதிக கட்டணம் வசூலிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து திருமலை செல்லும் பயணிக்கு நூறு ரூபா அறவீடு செய்யும் அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து திருமலை செல்லும்பயணிஒருவருக்கு ஐநூறு ரூபா அரசின் பயணிகள் கப்பலிற்கு அறவீடு செய்யப்படுகிறது.

சிறிலங்கா அரசினால்வடபகுதி பயணிகள் போக்குவரத்துக்கென அமர்த்தப்பட்டுள்ள கப்பலில் கட்டண வேறுபாடுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. தீவகத்தில் இருந்து திருமலை

(6ஆம் பக்கம் பார்க்க)

# சிறில் ரணதுங்கவின் தூதுவர் பதவி இம்மாத இறுதிக்குள் பறிபோகும்?

## மேலும் பல தூதுவர்கள் திருப்பி அழைக்கப்படுவர்

(கொழும்பு)

சிலவெளிநாட்டு தூதுவர்களை உடனடியாக பதவி துறந்து நாடு திரும்புமாறு கோரும்உத்தரவுஒன்றைவெளியிட புதிய அரசு திட்டமிட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இம்மாத இறுதிக்குள் இவ் உத்தரவு பிறப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

இவர்களில் லண்டனில் உள்ள சிறிலங்கா தூதுவர் ஜெனரல் சிறில் ரணதுங்க, வாஷிங்டனில் உள்ள தூதுவர் டாக்டர் ஆனந்தகுருகே, கன்பராவில் உள்ள தூதுவர் நிசங்க விஜேசுந்தர 'இந்தியாவில் உள்ள தூதுவர் பெர்னாட் திலகரட்ண, பிரான்ஸில் உள்ள தூதுவர் பேராசிரியர் எஸ். பி. ஹெட்டியாராய்ச்சி, ரியாத்தில் உள்ள தூதுவர் எம் ஐ அகமட், டாக்காவில் உள்ள தூதுவர் டாக்டர் ஏ. என். ஹனீபா ஆகியோரே திருப்பியழைக்கப்படவுள்ள தூதுவர்களாவர்.

இவர்களைத் தொடர்ந்து வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களும் திருப்பியழைக்கப்படவுள்ளனர் இவர்களில் சிலர் 10 வருடங்களுக்கு மேலாக இப்பணியில் உள்ள

(6ஆம் பக்கம் பார்க்க)

கூட்டுப்படை தலைமையக குண்டுவெடிப்பு

# சந்திரசேகரன் மீது வழக்கு ஒக்டோபர் 7இல் தீர்ப்பு

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணித் தலைவரும், தற்போதைய அரசில் பிரதி அமைச்சருமான சந்திரசேகரன்மீதான பயங்கரவாத தடைச்சட்ட வழக்கின் தீர்ப்பை அடுத்த மாதம் 7ஆம் திகதி வழங்குவதாக நீதிபதி அறிவித்துள்ளார்-

மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எழுத்து மூலம் மேலதிக தொகுப்புரை சமர்ப்பிக்க சிரேஷ்ட அரசசட்டவாதி அவகாசம் கோரினார். இதனை நிராகரித்த நீதிபதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### இறைச்சிக் கோழி

வேண்டிய நிறைகளில் புறோயிலர், இறைச்சிச் சேவல், விறாத்துச்குஞ்சுகள், வளர்ப்புக்குகந்த குஞ்சுகள் பேடுகள், ஊர்க் கோழிகள், நல்லின அடைமுட்டை கிடைக்கும். யாழ்ப்பாணம் வீதி, உரும்பிராய்ச் சந்தி (9348)

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, நாமகள் ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு தரகர் தேவையில்லை தொடர்பு கொள்ளவும். ந. அருணாசலம், நாமகள் ஒழுங்கை கொக்குவில் கிழக்கு (9363)

### தவறிவிட்டது

பூட்டுக்காப்பு 1¾ பவுண் பாஷையூர் சந்தைக்கு கிழக்கே வயோதிப சாலைக்கும், இடையே தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்திலே ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (9362)

### மாற்றப்பட்டு விட்டது

1- 9- 94 அன்று காலை திருநெல்வேலி இராசையா மருந்து விற்பனை நிலையத்துக்கு முன்பாக லுமாலா சைக்கிள் மாறிக் கொண்டு செல்லப்பட்டுள்ளது எடுத்தவர் அச்சைக்கிளை தந்து உங்களுடைய சைக்கிளை கீழ்க்காணும் முகவரியில் பெறவும் பொ. இராதாகிருஷ்ணண். 361, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் (9359)

### அராலியூர்

**ந. சுந்தரம்பிள்ளையின்**

அக்கரைச் சீமையில், ஆசிரியரது 45 வருடகால இலக்கிய அனுபவத்தில் பிறந்தது வாசித்தால் உண்மைக்கதை போலிருக்கும். இங்கிலாந்து போய் வந்த உணர்வு ஏற்படும். எங்கும் கிடைக்கும். [9183]

### பத்திரிகை திருட்டு

# ரஷ்ய விமானங்களை பரிசீலிக்க சிறிலங்கா விமானப்படைக் குழு

## முழு அறிக்கை புதிய அரசிடம் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)


ரஷ்யாவில் இருந்து முன்னைய அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட 72 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதத் தொகுதியில் ஒரு பகுதியான மூன்று இராணுவ போக்குவரத்து விமானங்களை பார்வையிட 5 பேர் கொண்ட சிறிலங்கா விமானப்படை குழு ஒன்று ரஷ்யா சென்றுள்ளது.

ரஷ்யாவிலிருந்து முன்னைய அரசால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆயுதந்தொகுதியில் சில அண்மையில் கொழும்பு வந்து சேர்ந்த போது அவை பாவனைக்குதவாதவை எனக் கண்டறியப்பட்டது இதைத் தொடர்ந்தே ஏனைய ஆயுதங்கள் தொடர்பாக பரிசீலனை செய்ய குழு ஒன்று ரஷ்யா அனுப்பப்பட்டது இக்குழுவினர் ரஷ்யாவிலிருந்து தருவிக்படவிருந்த மூன்று ஏ-என் 32 ரக இராணுவ போக்குவரத்து விமானம் குறித்த நிலைமையை பரிசீலித்து வருவதாகவும் அவர்களது கண்டுபிடிப்புகள் உடனுக்குடன் கொழும்பிற்கு அறிவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இக்குழுவினர் கொள்வனவு செய்யப்பட்ட ஹெலிகப்டர்கள் சிலவற்றை பரிசீலிப்பர் என நம்பப்படுகிறது இக்குழுவினர் விரைவில் நாடு திரும்பி தமது முழு அறிக்கையைபுதிய அரசிடம் சமர்ப்பிப்பர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன புதிய அரசுஏற்கனவேரஷ்யாவுடனான ஆயுத வர்த்தகத்தை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே ரஷ்யாவிலிருந்து வந்துசேர்ந்து விட்டகவச வாகனங்களுக்கான பெறுமதியில் 10 சதவீதம் மட்டுமே முன்னைய அரசினால்செலுத்தப்பட்டுள்ள நிலையில் இது புதிய அரசுக்கு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது-

இதனிடையே முன்னைய ஏற்பாட்டின்படி சிறிலங்கா விமானப்படைக்கு மூன்று எம் ஐ- 17 ரக ரஷ்யா ஹெலிகப்டர்கள் வந்து சேரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது-

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**பொன்னம்பலம் றொபேட் ஞானசீலன்**

**(பிரபு)**

| அன்னை மடியில் | ஆண்டவன் பிடியில் |
|---|---|
| 21-11-1970 | 12-09-1992 |

அன்பின் மகனாக, ஆருயிர் அண்ணாவாக;
வாசம் உள்ள மலராக பாசம் ஒன்றே
நினைவாக, வந்தாயே அண்ணா;
உன் ஆறுதல் வார்த்தைகள் இல்லாமல்,
முல்லைச் சிரிப்பைக் காணாமல், உன்னை
நினைக்க நெஞ்சு ஏங்குதண்ணா;
நித்தம் நினைவுகள் தெரியுதண்ணா;
பூவாகி கனியும் முன்னே காலம்
உன்னைப் பிரித்தாலும் ஆண்டு இரண்டு ஆனதே
அண்ணா ஆறவில்லை எம்மனம் ஆயிரம்
ஜென்மங்கள் வந்தாலும் என்றும் மறப்போமா
அண்ணா.

உனது பிரிவால் துயருறும்,
அம்மா, சகோதரர்கள்,
மற்றும் உறவினர்கள்.

தகவல்:- மைத்துனர்
செ. சுரேஸ்குமார்.

(9374)

## கண்ணீர் அஞ்சலி

சன்மார்க்கசபையினர் முன்னாள் தலைவரும்
சன்மார்க்க நுண்கலை மன்றப் பணிப்பாளரும்

## சிறப்புற நடந்த பல்கலைக்கழக பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ் பல்கலைக்கழகத்தின் 14 ஆம் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் கைலாசபதி கலையரங்கில் சிறப்புற நடைபெற்றது. 642 பட்டதாரிகள் நேற்று முன்தினம் பட்டங்களைப் பெற்றனர்.

மூன்று அமர்வுகளாக பட்டமளிப்பு விழா நடைபெற்றது. முன்னதாக காலை 9 மணிக்கு மங்கள இசை முழங்க துணைவேந்தர் க. குணரத்தினம் அழைத்து வரப்பட்டார். முதல் அமர்வில் கல்வி பட்டபின்படிப்புதகைமைசான்றிதழ், கலாநிதிபட்டம், மருத்துவ சத்திரசிகிச்சை, வர்த்தகமாணிபட்டங்கள் வழங்கப்பட்டன.

இரண்டாவது அமர்வில் விஞ்ஞான முதுமாணி, விஞ்ஞானமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன மதிய வேளையின் பின் மூன்றாம் அமர்வில் இசைக்கலைமாணி, கலைமாணி, நாட்டிய கலைமாணி, சித்தமருத்துவமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

முன்னாள் துணைவேந்தர் துரைராஜாவிற்கு இறப்பின் பின்னான விஞ்ஞான கலாநிதி பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. பட்டமளிப்பு விழாவைக்காண பெருமளவிலானோர் குழுமியிருந்தனர்.

## இரண்டாம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்



அன்னையின் மடியில்
03. 12. 1973

மண்ணின் மடியில்
12. 09. 1992

## நினைவு கூருகின்றோம்...

**12-09-1994**

1987-ம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,
கிளிநொச்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளரான
**ராஜேந்தர்** (ஜெகதீசன் பகீரதன்-கல்லூரி வீதி, காங்கேசன் துறை-யாழ்)

இதேதினத்தில் முல்லைத்தீவு-சிலாவத்தைப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்கள்.
வவுனியா-பண்டாரிக்குளம் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்,

1988-ம் ஆண்டு திருமலை-குச்சவெளி இரணைக்கேணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் வீரச்சாவெய்திய,
**2-ம் லெப். ராமு** (மாரிமுத்து ராமசாமி-குச்சவெளி-திருமலை)

1989-ம் ஆண்டு இந்தியப்படை மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,
**நேரு** (கணபதிப்பிள்ளை அழகரட்ணம்-கட்டுக்குளம்-திருமலை)

1990 ம் ஆண்டு யாழ்-மயிலிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,
**கலாபரன்** (-மனோஜ்குமார்-சேனைத்தெரு, கருவேப்பங்கேணி-மட்டு)

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**லெப். சிங்கர்** (கந்தசாமி ஒவிராஜ்- கிரான்-மட்டு)
**பாலு** (சாமித்தம்பி திவ்விராஜா-புதுக்குடியிருப்பு மட்டு)
**லெப். வசி** (அண்ணாமலை செல்வயோகன் 3-ம் வட்டாரம், முள்ளியவளை-மணலாறு)

**2-ம் லெப். பிரபு - நெல்சன்** (தர்மலிங்கம் ராஜ்குமார்-குமுழமுனை-மணலாறு)
**2 ம் லெப். மாலினி** (வாசுகி சிவானந்தன்-3-ம் வட்டாரம், முள்ளியவளை-மணலாறு)
**ரகுநாத்** (ஆறுமுகம் பேரின்பராஜா-தண்ணீரூற்று, முள்ளியவளை-மணலாறு)
**வினோத் - அமிர்தநாதன்** (குமார் பாலசுந்தரம் தண்ணீரூற்று, முள்ளியவளை-மணலாறு)
**2-ம் லெப். நிரஞ்சன்** (கனகசபை இராஜேந்திரம் -புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)
**மதி** (மாரிமுத்து ஜீவகுமார் - வசந்தபுரம், கெருடமடு, ஒட்டிசுட்டான்)
**சேனாதி** (அழகு ரவீந்திரன்-முரசுமோட்டை, பரந்தன்-கிளிநொச்சி)
**மேஜர் விசு** (சாந்தா அன்ரன்-மாளிகைத்திடல், திருக்கேதீஸ்வரம்-மன்னார்)
**ஏஞ்சல்** (செல்வி சுப்பிரமணியம்-பனங்கட்டிக்கொட்டு -மன்னார்)
**கப்டன் பகீர் - பகீதரன்** (பாக்கியநாதன் அன்ரனி நிமால்-போயிட்டி, இளவாலை-யாழ்)
**சியோ** (நந்தினி தர்மலிங்கம்-கரணவாய்தெற்கு, கரவெட்டி-யாழ்)
**மாறன்** (துரைரட்ணம் ராஜாரகுநாத் -வல்வெட்டித்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பில் இயங்கி வரும் கப்டன் வானதி படிப்பகத்தில் வாசகர்களின் பார்வைக்கென வைக்கப்படும் பத்திரிகைகள் திருட்டுப் போய் விடுவதாக தெரிவிக்கப்படுகின்றது. தினமும் ஏதேனும் ஒரு பத்திரிகை காணாமல் போய் விடுவதாகவும், சில வேளைகளில் அது மீட்கப்பட்டதாகவும் குடியிருப்பு நிர்வாகத்தினர் தரப்பில் கூறப்பட்டது. வெள்ளிக்கிழமைகளில் இத் திருட்டு இடம் பெறுவது அதிகம் என்று கூறப்படுகிது.

(22)

## நஞ்சருந்தி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கையில் விரக்தியுற்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலைசெய்து கொண்டார். சென்ற வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆவரங்காலைச் சேர்ந்த இ. அமிர்தலிங்கம் (வயது 26) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார் குடும்பத்தில் ஏற்பட்ட சிறுதகராறு காரணமாக இவர் நஞ்சருந்தியதாகவும் உடனடியாக யாழ் போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

## அனுமதி நிறுத்தம்

(கொழும்பு)

சலுகை நிபந்தனைகளில் வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுதல் சென்றமாதம் முதலாம் திகதி தொடக்கம் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

ஓய்வுபெற்ற சித்திரப் பாடப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கலாகேசரி கலாலய இயக்குனருமாகிய,

### கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

- சன்மார்க்க சபையினர்

குரும்பசிட்டி.
தெல்லிப்பழை
12-9-94 (9378)

---

## கண்ணீர் அஞ்சலி



### கலாகேசரிஆறுமுகம் தம்பித்துரை

(இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
இயக்குனர் கலாகேசரி கலாலயம்)

உயர்ந்த உழைப்பும்
துடிப்பும் கொண்டு
வாழ்ந்த
உன்னத ஆசான்
சிற்ப ஓவிய துறையிலும்
ஆழமாய் வேரூன்றி
வேகமாக முன்னேறிய
ஸ்தபதி ஆவார்.

கலைத்துறையில் பல புதுமைகளைப் புகுத்தி எழுத்துத்துறையில், பல நூல்களையும் வெளியிட்டு தனக்கென முத்திரையை பதித்துக் கொண்டவரும் ஈழத்தின் பல இளம் சிற்பக்கலைஞர்களை உருவாக்கித் தந்த எமது குருவுக்கு எமது இதயம் கனிந்த கண்ணீர் அஞ்சலிகள்.

கி. கலாமோகன்
''கலாலயம்''

மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி (9376)

---



### பாண்டியன்
### (இரத்தினசிங்கம் விருன்சின் இதயராஜ்)

பெரிய விளான் இளவாலை

ஆண்டிரண்டில் எம்மை ஆழாத்துயரிலாழ்த்தி
மீளாத்துயில் கொண்டிருக்கும் எம்மினிய பாண்டியா
பாசமிகு பெற்றோர் சோதரரை மறந்து
மண்மீட்கச் சென்றாய் ஆனால் உன் சுகவீனம்
உன்னை மீண்டும் மீண்டும் வீட்டிற்கு அனுப்பியது.
நீ ஆறவில்லை ஓயவில்லை உதவிக்கரம்நீட்டிநின்றாய்
ஆனால் ஆனைக்கோட்டை மண்பிட்டி உனக்கு
சமனாய் மாறியது
உன் ஆன்மா சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்

இணுவில் வீதி, - நண்பர்கள்
மானிப்பாய். (9379) கப்டன் பாரத் வீதி

---

### செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் விளையாட்டுக்கழகம்

## அதிட்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

எமது விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட அதிட்ட லாபச்சீட்டின் பரிசுக்குரியவர்களின் இலக்கங்கள்:

1-ம் பரிசு இல:- 3385
2-ம் பரிசு இல:- 5353
3-ம் பரிசு இல:- 653

10 ஆறுதல் பரிசுகள்

இல:- 12030
இல:- 3033
இல:- 12163
இல;- 10377
இல:- 4658
இல:- 10633
இல:- 2274
இல:- 11933
இல;- 11715
இல:- 1582

இன்று 12-09-94 திங்கட்கிழமை பி; ப 3 மணிக்கு எமது செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

க. சுரேந்திரநாதன்
செயலாளர்

[9375]

---

**மாறன்** (துரைரட்ணம் ராஜாரகுநாத் - வல்வெட்டித் துறை)

மட்டு-சித்தாண்டிப்பகுதியில் சிறிலங்கா காவல் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**பிறேம்குமார்** (விநாயகமூர்த்தி ரவிச்சந்திரன் - திருக்கோயில் - அம்பாறை)

**ஜெயகணேஷ்** (நமசிவாயம் ரஜனிகாந் - கல்முனை - அம்பாறை)

**மதன்** (- சோமசுந்தரம் - மகிளூர்முனை, களுவாஞ்சிக்குடி - மட்டு)

**சுந்தரம்** (கந்தையா யோகராசா - கோரக்கல்லிமடு - மட்டு)

**வில்லியம்** (கணபதிப்பிள்ளை செல்வராசா - அம்பிலாந்துறை - மட்டு)

**வாமன்** (கனகசபை தேவா - தபாற்கந்தோர்வீதி, காரைநகர் - யாழ்)

1992-ம் ஆண்டு காரைநகரிலுள்ள, தூம்பிலிப்பிட்டிப் பகுதியில் வேவுபார்க்கச்சென்றபோது சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய,

**கரிகாலன் - பதுமன்** (வீரையா வீரபூரணகுமார் - வேலணை கிழக்கு - வேலணை)

1993-ம் ஆண்டு திருமலை-நிலாவெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். விற்கொடியன் - லிங்கம்** (சிவஞானம் ஜெயசங்கர் - சாம்பல்தீவு - திருமலை)

**லெப். வாசன்** (சந்தசாமி முரளிதரன் - ஐயனார் திடல், சாம்பல்தீவு - திருமலை]

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் இந்தியப்படையினராலும், சிறிலங்கா படையினராலும் தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10317)

# யுத்த எதிர்ப்பு இயக்கம் சிங்கள இளைஞர் அமைப்பு

## கிராமங்கள் தோறும் பிரசாரம்

(கொழும்பு)

யுத்த எதிர்ப்புணர்வு கொண்ட சிங்கள இளைஞர்கள் இணைந்து புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தடையாக இருப்பதில் புரிந்துணர்வின்மையும் ஒரு காரணம் என்றும் தமது அமைப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் கீழ் செயற்படாது ஏனெனில் அது எம் இலக்கை சிதைத்து விடும் என்றும் கூறினார் இவ்வமைப் பின்பொறுப்பாளர் ஜயம்பதி புலத்சிங்ஹள.

இவர்கள் இவ்வமைப்பினூடாக யுத்த எதிர்ப்புத்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இத்திட்டத்தின் மூலம் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் அதற்கான காரணங்கள் என்பவற்றை கிராமப்புறங்களுக்கு சென்று பிரசாரங்கள் செய்து வருகின்றனர்.

இந்த யுத்த எதிர்ப்புத்திட்டம் மூலம் இவ்வருடம் ஜூலை மாதம் முதல் 83 இனப்படுகொலையை பாவத்திற்குரியஒரு நாளாக நினைவு கூரும் முகமாக சுவரொட்டி மற்றும் துண்டு பிரசுர விநியோகம் கருத்தரங்கு, கூட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன. இவர்களது துண்டுப் பிரசுரங்களில் பொதுவாக இனமுரண்பாட்டுக்கான காரணம், ஆரம்பம், பின்னணி அதற்கு தலைமை தாங்குவோம் அதன் கோரப் பலன்கள் என்பன சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்த செயற்பாடுகள் கிராமிய சிங்கள மக்கள் மத்தியில் நல்ல பயனை அளித்திருப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாங்கள் இவ்வளவு பெரிய கொடூர இனவாதிகளாக இருந்திருக்கின்றோம். என்பதை நினைக்கும்போது வெட்கமாக இருக்கிறது என கம்பஹாவில் இவ்வமைப்பினரின் கூட்டத்தின் முடிவில் பெண்மணி ஒருவர் கூறினாராம்.

ஒவ்வொரு வினாடியும் யுத்தத்திற்காக 793 ரூபாவும் வருடத்திற்கு 2,500 கோடி ரூபாவும் செலவாகிறது. கல்விக்கு 1500 கோடி ரூபா கூட செலவாவதில்லை. 1983 இல் 12,500 பேர் இருந்த படையினர் 1993 இல் 80,000க்கும் மேலாக அதிகரிக்கப்பட்டது. ஆனாலு பிரச்சினை தீர்ந்ததா? நாட்டில் போரினால் 4,87,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 2,50,000 பேர் அகதி முகாம்களில். நாட்டில் 16 பேருக்கு ஒருவர் அகதி, தென்னாசியாவில் பெரிய அகதிமுகாம் இந்நாட்டிலேயே மடுப்பகுதியில் அமைந்துள்ளது. இனிமேலும் கண்ணையும் காதையும் பொத்திக் கொண்டிருக்க முடியுமா? என துண்டு பிரசுரம் ஒன்றில் கேட்கப்பட்டுள்ளது.

குருநாகல், அல்பிட்டிய, கரந்தெனிய அம்பலாங்கொட பகுதிகளில் இவ்வமைப்பினர் தொடர்ந்தும் கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

## இருதார திருமணம்; குற்றப்பணம்செலுத்ததீர்ப்பு

(வடமராட்சி)

பதிவுசெய்யப்பட்ட மனைவி இருக்கும்போது வேறொரு பெண்ணை திருமணம் செய்த நபர் ஒருவருக்கும் அப்பெண்ணுக்கும் பருத்தித்துறை தமிழீழ நீதிமன்று தலா 8 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டது.

கம்பர்மலையைச் சேர்ந்த இவ்விருவர் மீதும் வல்வெட்டித்துறை காவல்துறையினர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ததையடுத்து நீதியாளர் பிரதீபா அண்மையில் மேற்படி தீர்ப்பை வழங்கினார். மேலும் முதலாவது பெண்ணுடன் சேர்ந்து வாழவேண்டுமெனவும் அந்நபரை பணித்துள்ளார்.

இதன்போது நீதிமன்றில் முதலாவது பெண்ணுக்கும் கணவனுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதை அடுத்து நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக நீதியாளர் பிரதீபா இருவருக்கும் தலா 1500 ரூபா குற்றப் பணம் செலுத்துமாறும் தீர்ப்பு வழங்கினார். (யோ)

## சமூக சீர்கேட்டில் ஈடுபட்ட இருவருக்கு தண்டனை

(வடமராட்சி)

சமூக ஒழுக்கச் சீர்கேட்டில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் வல்வெட்டித்துறை காவல்துறையினர் ஒரு ஆணையும் பெண்ணையும் பருத்தித்துறை நீதிமன்றம் முன் ஆஜர் செய்தனர்.

வல்வெட்டித்துறை பங்கூரான் வெளியைச் சேர்ந்த ஆண் ஒருவர் தனது மனைவியின் தங்கையுடன் சமூக சீர்கேட்டு நடவடிக்கையில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டப்பட்டார்.

இவ் இருவருக்கும் பருத்தித்துறை நீதிமன்ற நீதியாளர் பிரதீபா தலா 5.000 ரூபா குற்றப்பணம் அறவிடுமாறும் தவறின் தலா 200 நாட்கள் சிறைத்தண்டனையும் விதித்துள்ளார். (யோ)

## அபிவிருத்தி கடன் வழங்க அரச வங்கிகள் திட்டம்

வடகிழக்கில், அபிவிருத்தி திட்ட கடன்களை வழங்க அரச வங்கிகள் தயார் நிலையில் இருப்பதாக கொழும்பில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தத்தினால் பாதிப்படைந்துள்ள வடகிழக்கு பகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அபிவிருத்தி திட்ட கடன்களை வட-கிழக்கு மக்களிற்கு வழங்குவது பற்றிய ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இவற்றை வடகிழக்கில் எப்படி நடைமுறைப்படுத்துவது என்ற முடிவு விரைவில் எடுக்கப்பட்டு இதுபற்றிய அறிவுறுத்தல்களும் நிதியும் விரைவில் வடகிழக்கில் உள்ள அரச வங்கிகளிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக மேலும் தெரிய வருகிறது. (நி- 88)

## பங்களாதேஷ் கப்பல் பாறையில் மோதி சேதம்

### காலி துறைமுகம் அருகே விபத்து

பங்களாதேஷிலிருந்து வந்த கப்பலொன்று, காலி துறைமுகத்திற்கு அப்பாலுள்ள வரகல என்னுமிடத்தில் கற்பாறைகள்மேல் மோதி பலத்த சேதமடைந்துள்ளது.

பங்களாதேஷிலிருந்து பசளை மூடைகளை காலி துறைமுகத்துக்கு ஏற்றி வந்த கொன்சமாலி ஆஷா பஜ்ஜா எனப்படும் கப்பல், பசளைகளை இறக்கி முடித்தபின், இந்தியாவுக்கு புறப்பட்டுச் சென்றபோதே இவ்விபத்து ஏற்பட்டதாக தெரிய வருகிறது.

## லால் ஜெயவர்த்தன நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவின்

## நிதி உதவி உலகவங்கிமறுப்பு

முன்னைய அரசின் ஊழல்

## புதிய அரசுக்கு இ.தொ. கா. ஆதரவளிப்பதில் தவறில்லை

### கட்சி செயற்குழுக் கூட்ட முடிவில் தொண்டமான்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் சிறந்த திட்டங்களை ஐ.தே.க ஆதரிக்கிறது. எனவே இலங்கை தொழிலாளர் காங்கிரசும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் சாதனைகளுக்கு ஆதரவளிப்பதில் தவறில்லை. தோட்டத்தொழிலாளரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நம்பிக்கையை புதிய அரசு வழங்கியுள்ளது. அரசியல் கட்சி எது என்பது எமக்கு அக்கறையில்லை. சமுதாயத்திற்கு சேவை செய்வதே எமது நோக்கம். இவ்வாறு இ.தொ.கா தலைவர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் கட்சியின் செயற்குழு கூட்டத்தின் பின் செய்தியாளர்களிடையே பேசிய தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் பொருத்தமான கொள்கைகளை வகுத்து கடைப்பிடிக்குமாறு கட்சிசெயற்குழு தொண்டமானுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டபின் யாருக்கு ஆதரவு வழங்குவது என இ தொ.கா முடிவு செய்யும் என தொண்டமான் குறிப்பிட்டார்.

இ தொ. கா அரசியற் பிரிவு உபதலைவராக முன்னாள் அமைச்சர் பி.பி.தேவராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கருத்து தெரிவிக்கையில், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பல புதிய திட்டங்களை ஏற்கனவே அமுல் செய்யத் தொடங்கியுள்ளது. எனவே அதை ஆதரிப்பதில் தவறில்லை என்றார். வடமாகாணம் மீதான பொருளாதாரத் தடையை அரசு ஓரளவு தளர்த்தியது. இதனால் நிலைமை முன்னேற்றம் கண்டுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க நாம் முன்னைய அரசுடன் பேச்சு

## கமக்காரர் அறிமுக அட்டை பெற்றுக்கொள்ள ஏற்பாடு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள கமக்காரர் அறிமுக அட்டைக்கூடாக இவ்வாண்டு காலபோக பயிர்ச்செய்கைக்கான அனைத்து உள்ளீட்டுப் பொருட்களும் விநியோகிப்பதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதால் செய்கையாளரின் விண்ணப்பத்திற்கமைவாக காலமும் கமக்காரர் அறிமுக அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்கள் உடன் அவ்வப் பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினருடன் தொடர்பு கொண்டு இம் மாதம் இறுதிப் பகுதிக்கு முன்னர் கமக்காரர் அறிமுக அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். அட்டைகள் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் இருப்பின் அவ்வப்பகுதி

## 40 மணி நேரமே உச்ச அளவு

(நல்லூர்)

ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களாக கற்பிப்பவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு உச்சளவு 40 மணித்தியாலம் மட்டுமே வழங்குவது என யாழ். கல்வி வலயம் -1 தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் உரிய கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயம் -1 தெரிவித்துள்ளது. (17)

## சிறையிலுள்ளவர்விபரமறிய ஐவர் அடங்கியகுழு அமைப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி தடுப்புக் காவலிலும், சிறையிலும் உள்ள வடக்கு-கிழக்கை சேர்ந்த சுமார் 2000 தமிழ் இளைஞர்கள் தொடர்பாக ஆராய்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தமக்கு சிபார்சு செய்வதற்காக அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ. எல் பீரிஸ் ஐவர் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

அன்டன் சௌஸாவை தலைவராகக் கொண்ட இக் குழுவில் ஓய்வு பெற்ற நீதியரசர் சிவா செல்லையா, சட்டத்தரணி அஸ்ஸி சமரஜீவா, சட்டமா அதிபர் திணைக்களத்தைச்சேர்ந்த ஆர். பி. டி. சில்வா, கோஷலா அபயவர்தன ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இவ் விளைஞர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகள், நடைபெற்ற விசாரணை முடிவுகள், மேல்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டும் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவு கிடைக்காததால் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் நிலை பற்றி ஆராய்ந்து மூன்று மாத காலத்தினுள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி அமைச்சர் இக்குழுவை கோரியுள்ளார்.

## புதிய வீடுகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தீவக மக்கள் தங்கியுள்ள யாழ். புகையிரத நிலைய முகாமில் புதிதாக வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன குடியிருப்பின் கிழக்குப் பகுதியில் இருந்த இரண்டு பெரிய கொட்டகைகள் அகற்றப்பட்டு அவற்றில் வசித்த குடும்பங்களுக்கென தற்போது புதியதாக தனித்தனிக் குடிசைகள் போடப்படுகின்றன. சுமார் இருபது குடிசைகள் வரை போடப்படுவதாக குடியிருப்பு நிர்வாகத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (22)

## தனது அமைச்சில் அஷ்ரப் புதிய நியமனங்கள்

(கொழும்பு)

துறைமுக கப்பற் போக்குவரத்து, புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சின் கீழ் இயங்கும் பல நிறுவனங்களுக்கு அமைச்சர் எம். எச் - எம் அஷ்ரப் புதிய நியமனங்களை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை கப்பல் சேவைப் பணியகத்தின் தலைவராக முன்னாள் செனட்டர் எஸ். இசட். எம். மசூர் மௌலானா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ரஞ்சித் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகப்பணிப்பாளராக சட்டத்தரணி அபுல்கலாம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு

## நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவின் பொருளாதார ஆலோசகராக கலாநிதி லால் ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். கலாநிதி லால் ஜெயவர்த்தன, இதுவரை ஐக்கிய நாடுகள் சபையின் உதவி செயலாளர் நாயகமாக கடமையாற்றினார்.

## நிதி உதவி உலகவங்கிமறுப்பு

முன்னைய அரசின் ஊழல்களின் காரணமாக இவ்வாண்டுக்கான உதவியை சிறிலங்காவிற்கு வழங்க உலக வங்கி மறுப்பு தெரிவித்திருப்பதாக சிறிலங்காவின் பிரதமரும் நிதி அமைச்சருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா கூறியுள்ளார்.

## சட்டவிரோத துப்பாக்கிகள் தங்காலையில் மீட்பு

(கொழும்பு)

தங்காலைப் பொலிசார் நேற்று முன்தினம்பெருந்தொகையான இராணுவ சீருடைத் துணிகள், சட்டவிரோத துப்பாக்கிகள் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர்.

தங்காலை நகரசபைப் பகுதியில் நகரசபைத் தலைவரது இல்லத்தை பொலிசார் சோதனையிட்ட போது இந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கைத்துப்பாக்கிகள், வெடிமருந்துகள், தோட்டாக்கள் மேலும் ஆர். பி ஜி. மோட்டார் ஷெல்கள் மற்றும் வெடிகுண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டிருப்பதில் சிலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக நான்கு பேர் பொலிசாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## யுத்தத்திற்கு எதிராகவே நான் செயற்பட்டு வந்தேன்

### முன்னாள் நிதியமைச்சர் றொனிடிமெல்

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண புதிய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஐ. தே. க. தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என மாத்தறை மாவட்ட ஐ.தே.க. எம் பி றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

நான் எப்போதும் யுத்தத்திற்கு எதிராகவே செயற்பட்டேன். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என ஆரம்பம் முதல் நான் கூறிவந்தேன். போரிற்கு பெரும் பணம் செலவாவதை எதிர்த்தேன் பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதை வரவேற்கிறேன். என்றும் றொனி டிமெல் கூறியுள்ளார்.

## மட்டு. இணைப்பதிகாரி றோகான் இடமாற்றம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியாக கடமையாற்றிய பிரிகேடியர் றோகான் குணவர்த்தனா கொழும்புக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு பிரிகேடியர் நிஹால்ஜெயக்கொடி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த வியாழன் முதல் கடமையாற்றி வருகிறார்.

கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதால் செய்கையாளரின் விண்ணப்பத்திற்கமைவாக கமக்காரர் அறிமுக அட்டைகள் தயாரிக்கப்பட்டு இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள், அட்டைக்கு விண்ணப்பித்து புகைப்படம் கொடுத்து அட்டையை பெற்றுக் கொள்ளாதவர்கள், இதுவரை கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். அட்டைகள் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் இருப்பின் அவ்வப்பகுதி வட்டத் தொடர்பாளருடனோ, அல்லது வட்ட பதிவாளருடனோ தொடர்பு கொள்ளும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

டுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க நாம் முன்னைய அரசுடன் பேச்சு நடத்தினோம். எவ்வித பலனும் கிடைக்கவில்லை என்றும் தேவராஜ் குறிப்பிட்டார்

நேற்று முன்தினம் இ.தொ.கா செயற்குழுக் கூட்டத்தில் 184 உறுப்பினர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து நீதிமன்றில் மனு

### தோல்வியுற்ற வேட்பாளர்கள் தாக்கல்

(கொழும்பு)

யாழ் மாவட்ட தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரு தேர்தல் ஆட்சேபன மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகளாக யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவான எம் பிகள் மற்றும் தேர்தல் ஆணையாளர், யாழ் மாவட்ட தேர்தல் அத்தாட்சி அதிகாரிகளான கே. மாணிக்கவாசகர், லக்ஷ்மன் பெரேரா, சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வாக்காளரை பயமுறுத்தியமை, மதுவகை, குளிர்பானங்கள் வழங்கி செல்வாக்கு பிரயோகித்தமைவேட்பாளருக்கு கடற்படை கப்பலில் போக்குவரத்து வசதி செய்தமை என்பன சில குற்றச்சாட்டுகளாகும். யாழ் மாவட்ட தேர்தலில் தோல்வியடைந்த சுயேட்சைக்குழு ஒன்றின் வேட்பாளர்கள் இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். வாக்காளர் அட்டை வழங்கப்படாமலேயே வாக்குப்பதிவு நடைபெற்றதாகவும் இவர்கள் குற்றஞ்சாட்டி தேர்தலை ரத்து செய்யக் கோரியுள்ளனர்.

---

## கூட்டம்

யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலை பழைய மாணவர் சங்க புனரமைப்புக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி புனரமைப்புக் கூட்டத்தில் சகல பழைய மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (சி)

## பருத்தித்துறை நீதிமன்ற ஓராண்டு பூர்த்தி விழா

(வடமராட்சி)

பருத்தித்துறை தமிழீழ நீதிமன்ற ஓராண்டு பூர்த்திநாள் கடந்த சனியன்று நீதியாளர் ஒப்பிலான் தலைமையில்பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமானது. மங்கள விளக்கை சட்டவாளர் திரு. கணேசராசா, நீதியாளர் பிரதீபா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

மௌன அஞ்சலியைத் தொடர்ந்து நீதிமன்றப் பதிவாளர் சிவபசுபதி வரவேற்புரையை வழங்கினார். சிறப்பு விருந்தினராக தமிழீழ நீதித்துறை பொறுப்பாளர் திரு. பரா கலந்து கொண்டார்.

ஓராண்டு பூர்த்திவிழா நிகழ்வுரையை தமிழீழ நீதித்துறை பொறுப்பாளர் திரு. பரா, அரச சட்டவாளர் மணியரசன், சட்டவாளர்சிவனருட்சுந்தரம் நடுவப்பணியகப் பொறுப்பாளர் கணபதிப்பிள்ளை, காவல்துறை சார்பாக தெய்வேந்திரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இவ்வைபவத்தில் நாகர் கோயில் காவல்துறை பொறுப்பாளர் அருண்ஜோதீஸ்வரன் அலுவலக ஊழியர்கள், பருத்தித்துறை காவல்துறை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டார்.

(யோ)

## கிளிநொச்சி வந்தன

வடபகுதி வைத்தியசாலைகளுக்கென பிரிட்டன் 59வகையான மருத்துவ உபகரணங்களை அன்பளிப்பு செய்துள்ளது. சத்திர சிகிச்சை உபகரணங்கள், எக்ஸ் கதிர் கருவிகள், மின்பிறப்பாக்கிகள் என்பன அவற்றுள் அடங்கும். இவற்றில் ஒரு பகுதி கிளிநொச்சிக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு பாதுகாப்புவழங்ககோரிக்கை

### ஏ.எம்.எச். அஸ்வர் விடுத்தார்

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஐ தே க. ஆதரவாளர்களின் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல ஆதரவாளர்களுக்கு தொலைபேசி மூலம் தொலைப்பயமுறுத்தல்களும் விடுக்கப்படுகின்றன இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் ஐ தே க இராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் பிரதி பாதுகாப்பு அமைச்சர் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வீடுகள் எரிக்கப்பட்டதையடுத்து குடியிருப்பாளர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யச் சென்ற போதும் பொலிசார் முறைப்பாடுகளை ஏற்க மறுக்கின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## கே. எஸ். ராஜா மரணத்தில் மர்மம் எனஉறவினர் கவலை

(கொழும்பு)

பிரபல வானொலி அறிவிப்பாளர் கே.எஸ். ராஜாவின் மரணத்தில் மர்மம் இருப்பதாக அவர்களது உறவினர்கள் தெரிவிக்கின்றனர். சம்பவம் நடைபெற்ற தினமான கடந்த சனியன்று தனது நண்பர்களை நேரில் சந்தித்தும் தொலைபேசி வாயிலாகவும் தான் புதிய பதவி ஒன்றை பெறப்போவதாகவும் அதனால் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கே எஸ். ராஜா தற்கொலை செய்யும் அளவிற்கு அவருக்கு பிரச்சினை இருக்கவில்லை என அவரின் நெருங்கிய உறவினர்கள் தெரிவிக்கின்றனர். ராஜா அனேகமாக காலிமுகத்திடலுக்கு செல்வதில்லை எனவும் இவரின் சடலம் காலிமுகத்திடலுக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது மர்மத்தை ஏற்படுத்துவதாகவும் தவிர தற்கொலை செய்ய அவர் சனநெருக்கடி மிக்க காலிமுகத்திடலை தெரிவு செய்திருக்கமாட்டார் எனவும் அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஆயுதம்பறிமுதலாகாவிடின் ஒழுங்கு நடவடிக்கை

### பொலிசாருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

அனுமதியின்றி வைத்திருக்கும் ஆயுதங்களை மீளப்பறிமுதல் செய்யாத பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வீதி போக்குவரத்து பொலிசாரையும் சட்டவிரோத ஆயுதங்கள் பறிப்பு தொடர்பாக தீவிரமாகச் செயற்படுமாறு பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளார். இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு சகல பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிகளும் பணிக்கப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய மாணவர் குறித்த

## விசாரணைக் குழுவிற்கு பெற்றோர் பாராட்டு

(கொழும்பு)

காணாமற்போன பிள்ளைகளைப் பற்றி விசாரணை நடத்துவதற்குசுதந்திர ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைக்கு எம்பிலிப்பிட்டியபகுதியில்காணாமற்போன பிள்ளைகளின் பெற்றோர் அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் நடைபெற்று 56 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும் இதுபற்றி நூறுக்கும் மேற்பட்ட கடிதங்கள் முன்னைய அரசுக்கு அனுப்பப்பட்ட போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாணசபை உறுப்பினர்

## நியமனத்தை எதிர்த்து உண்ணாவிரத அச்சுறுத்தல்

(கொழும்பு)

தென் மாகாண சபையின் உறுப்பினர் வெற்றிடத்தை உரிய முறையில் நிறைவேற்றாது விட்டால் தாம் செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை மாகாணசபை முன்னால் நடத்தப் போவதாக வீரகொட்டிய மக்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டபோது இவரின் வெற்றிடத்திற்கு அடுத்த விருப்பு வாக்குகளைப் பெற்ற ஓ.கே. சிறிசேன நியமிக்கப்பட வேண்டும் என்றும் ஆனால் ஐ.தே.க, வீ.ஜீ பியசேனாவை நியமித்ததைத் தொடர்ந்து இச் சர்ச்சை எழுந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சுமார் பதினைந்து ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் உண்ணா விரதப் போராட்டம் நடத்த இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

### சிரமதானம்

சோலை கரியாலை நாகபடுவான் குமிழமுனை ஆகிய கிராமிய உற்பத்திக் குழு பகுதியினர் அண்மையில் ஒழுங்கு செய்த சிரமதான பணியில் அப்பகுதியைச் சேர்ந்த பெருந்தொகையான மக்களும் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டு பெய்த கடும் மழையினால் சீரழிந்த நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட பிரதான வீதிகள்-மக்கள் நடமாடும் பொது இடங்கள் அனைத்தும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

# எந்த உடன்பாடும் மக்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்

### கலாநிதி ஜயதேவ உயங்கொட தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்ய முடியாத எந்த தீர்வும் உதவாது. இம்மக்களின் அபிலாஷைகள் என்ன என்பது பற்றிய புரிந்துணர்வும் உணர்திறனும் இதுவரை காலமும் உரிய முறையில் வெளிப்படுத்தப்படவில்லை. இது தொடர்பாக அடிமட்டத்திலிருந்து மேலெழும் சமாதான முயற்சிகள் புரிந்துணர்வை வளர்த்தல் போன்றமுயற்சிகள் அவசியம் இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கலாநிதி ஜயதேவ உயங்கொட தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஆசிரியர்களுடனான தற்போதைய அரசியல்நிலைகுறித்து கொழும்பில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது; இதுவரைகால ஒப்பந்தங்கள் தோல்வியடைந்தமைக்குக்காரணம் அவை மக்களின் ஆதரவை முன்வைத்து செய்யப்படவில்லை. பல விடயங்கள் ரகசியமாக இருந்தன என்பதும் காரணம். எந்த உடன்பாடும் மக்களுக்கு தெரியாமல் செய்யப்படக் கூடாது.

அதே சமயம் உடன்பாட்டை ஏற்கும் மனநிலை மக்களிடையே வளர பொதுசன தொடர்பு சாதனங்கள் பயன்பட வேண்டும். யுத்தம்பற்றிய பிரசாரங்கள் ஒழிக்கப்பட்டு அழிவுகளும் அனர்த்தங்களும் எப்படி வடக்கு கிழக்கு மக்களை பாதித்துள்ளன என்பதை உணர்வு பூர்வமாக வானொலி, தொலைக்காட்சி என்பன சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இத்தகைய முன்னெடுப்புகள் இணக்கப்பாட்டுக்கான ஒரு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தும்.

எமது சிந்தனை, சமாதான நோக்கு, புதிய அரசியல் போன்ற விடயங்கள் குறித்து புதிய அரசினுள் மிகுந்த ஏற்கும் நிலை இருப்பதால் எமது அறிவு பயன்பாட்டுக்கும் அறிவு பண்பாட்டிற்கும் ஒரு புதிய தளம் கிடைத்துள்ளதாக நம்புகிறேன்.

நிச்சயமாக 17 வருட பயங்கரவாதம் முடிவுக்கு வந்திருப்பதுஆறுதலளிக்கிறது இலங்கையின் அரசியல் கலாசாரத்தை பயங்கரவாத கலாசாரமாக மாற்றியது ஐ.தே.க. அரசே. ஊழல் மோசடி என்பன அரசியல் கலாசாரத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு அம்சமாகவே ஐ.தே.க. மாற்றிவிட்டது

கூட்டு அரசியல் வினைத்திறன் குறைவு என்று பாரம்பரிய அரசியலாளர்கள் கருதி வந்துள்ளனர். எனினும் கூட்டு அரசியலூடாக வரக்கூடிய அரசியல் இணக்கம் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பரவலாக்கப்பட்டால் அது நிறைந்த பலனைத் தரும். இணக்கத்தையும் தீர்வையும் ஒருபோதுமே மேலிருந்து திணிக்க முடியாது என்றார்.

## காணாமற் போனோரின் குடும்பத்திற்கு உதவநிதியம்

### கனடா 25 இலட்சம் நிதி உதவி

(கொழும்பு)

காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தெரிவித்துள்ளார் இந்நிதியத்திற்கு வெளிநாடுகளிலிருந்தும் பொதுஸ்தாபனங்கள் மற்றும் நலன் விரும்பிகளும் நிதிஉதவி புரியலாம் என அவர் கூறினார்

இப்போது கனடா இதற்கென 25 இலட்சம் ரூபா வழங்கியுள்ளது பிரிட்டனிடமிருந்து உதவிபெறும் பொருட்டு அமைச்சர் பீரிஸ் பேச்சுக்களை நடத்தி வருகிறார்

## 3 ஆம் ஆண்டு நினைவாக



மண்ணிலே மலர்ந்தது-
21. 04. 72

மாவீரனாய் மறைந்தது
16. 09. 91

திதி
12. 09. 94

### லெப். டொமினிக் மாஸ்ரர்
### (நடேசன் குமரேசன்)

வாழ வழி நூறிருந்தும் வந்த பகை வீழ்ந்திடவே
வாளேந்தி நின்ற பிள்ளை
பாசமெல்லாம் துறந்து எம்முள்
வாசமலராகியன்றோ வாழ்கின்றான்
நீ விழவில்லை யென்று இன்றிவனை
நினைந்துருகி அஞ்சலி செய்வோம்.

மணலாற்றிலே இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

நீர்வேலி,
குமரேசன் வீதி.
(டொமினிக்) (9351) - குடும்பத்தினர்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:-
28. 04. 1974

வீரச்சாவு:-
12. 09. 1991

### வீரவேங்கை சியோ
### (தர்மலிங்கம் நந்தினி)

சித்திரத்தில் எழுதவைத்தாய்,
சிலை செய்து வணங்க நின்றாய்,
புத்தகத்தில் எழுதிப் புகழவைத்தாய்,
புலியாகிப் புவிபோற்ற என்றும் வாழும் மகளே;
பெற்றவர்க்கும், சோதரற்கும் இது தவிர பெருமையுண்டோ.

மலையாளந்தோட்டம், - குடும்பத்தினர்
கரணவாய் தெற்கு. [9373]

### நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோருக்கான யூலைமாத இறுதி இரண்டு வாரங்களுக்கான நிவாரண உலர்உணவுப் பொருட்களாக அரிசி, மா, சீனி, மைசூர்ப்பருப்பு, தேயிலை, சிந்தாமணிக்கடலை, சன்லைட் சோப் ஆகியன வழங்கப்படும் என யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 17-பி இலக்க புள்ளிக்கு வழங்கப்படும் இவ் விநியோகம் இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னர் முடிவடைய வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (22)

### மருத்துவ நூல் வெளியீடு

வைத்திய கலாநிதி எஸ் பி. ஆர். சீர்மறனின் சிலநோய்

ஒரு புதிய மாற்றத்துக்கான திறவுகோல்

# A/L 95
# DAY CLASS

கணித - உயிரியற்பிரிவு

ஆரம்பம்

ஓராண்டு சென்றாலும்

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

கணித - உயிரியற்பிரிவு

ஆரம்பம்

23-09-1994

**பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் வரை**

**கட்டணம் அறவிடப்பட மாட்டாது**

★ 95 ஆவணியில் பரீட்சைச்குத் தோற்ற உள்ள, பாடசாலை செல்லாத மாணவர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

★ வகுப்புகள் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 8-30 — 12-30 மணி வரை நடைபெறும்.

★ முழுப்பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

★ 94 ஆவணியில் நடைபெற்ற பரீட்சை வினாத் தாள்கள் புள்ளியிடும் திட்டத்துடன் ஆரம்பவகுப்புகளில் ஆராயப்படும். நடைபெற்று முடிந்த பரீட்சையில் உங்கள் பெறுபேறுகளை முன்னரேயே தீர்மானிக்க இது உதவும்.

★ வகுப்புகள் யூனிவேர்சல் கல்வி நிறுவனத்திலும், நேச்சர் விஞ்ஞானக் கல்வி நிறுவனத்திலும் வெவ்வேறு பிரிவுகளாக நடைபெறும்.

★ எனினும், இரு பிரிவுகளுக்கான அனுமதிகளும் யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தில் மாத்திரமே 19-09-1994 வரை வழங்கப்படும்.

**சமயோசிதமான**
**ஆசிரியத் தெரிவே**
**உங்களை**
**மீட்சிக்குரியவராக்கும்**

| யூனிவேர்சல் | நேச்சர் |
|---|---|
| கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம். | ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். |

(சி-10318)

---

## ஓராண்டு சென்றாலும் நீங்காத நினைவலைகள்



மொட்டாக மலர்ந்தது
1972 09. 16

பூவாக உதிர்ந்தது
1993. 09. 23

## கப்டன் நிரேஷ்|ஆராவமுதன்

(குலவீரசிங்கம் தேவபாலன்)

திதி:- 1994-09-12

ஓராண்டு சென்றாலும் உன் நினைவுகள் ஓயாது
ஈராறு மாதங்களும் இறுதியாய் முடிந்ததென்று
இறைவனை வேண்டுகின்றோம்.
உறுதியாய் உன்னுருவம் எம்மண்ணில் பிறக்குமென்று
இல்லம் செழிக்க இதயங்கள் பூத்துக் குலுங்க
ஆராவமுதனே ஆராரோ தாலாட்டி ஈன்றெடுத்த
ஈழத்தாய் நீரில் மூழ்கிய நிரேஷே நீர் தானோ
நின்பாதம் தாழ் வணங்கி நினைவுடனே
வாடுகின்றோம்
அண்ணா அடிபணிந்தார் அக்கா செயலிழந்தார்
தம்பிமார் தங்கைமார் கலங்கியே வாடினமே
அப்பாவும் அம்மாவும் அங்கமெல்லாம்
நின்றுகெட்டு அலைகடலில் மூழ்கினமே
உற்றாரும் உறவினரும் உனைத்தேடி அலையினமே
ஆராவமுதா நின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவன் தாழ் பணிந்து நிற்கின்றோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

- குடும்பத்தினர்.

(9367)

---

## மருத்துவ நூல் வெளியீடு

வைத்திய கலாநிதி எஸ் பி. ஆர். சிர்மாறனின் "சிலநோய்களும் ஆலோசனைகளும்'' எனும் நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் புதன்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ் வி. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரட்ணம் நூலை வெளியிட்டு வைக்க தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் ப தமிழ்ச்செல்வன் முதற்பிரதியை பெற்றுக் கொள்வார் நல்லைஆதீனமுதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

## கலந்துரையாடல்

தமிழீழத்தின் நீர்வளத்தை பேணும் பொருட்டு ஐந்தாண்டு திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கான தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தொழில் நுட்பவியலாளருடன் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளது.

இக் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 10. 30 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொழில் நுட்பவியலாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கிறது.


## நவம்பரில் விரிவுரை

(வவுனியா)

வவுனியா இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி முதல் விரிவுரைகள் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

---

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை ராஜேந்தர்

(ஜெகதீசன் பகிரதன்)

(சோதி வீதி, காங்கேசன்துறை)

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 28-11-1965 | 12-09-1987 |

தேசமீட்பு வேள்வியில் தீச்சுடரானாய்
தேகசுகம் பாராமல் போர்க் கொடி எடுத்தாய்
நேசம் கொண்ட கல்வியை பாதியில் நிறுத்தி-
போர்ப்
பாசறைப் பக்கம் நீ மனந்தனை விடுத்தாய்
தமிழீழக் கல்வியை தரமுயர்த்த நினைத்தாய்
கல்வித்துறை மீதினிலே கருத்தினை சேர்த்தாய்-உன்
தேசநேசப்பாங்கினை தேச விரோதிகளால்
ஜீரணிக்க முடியவில்லை
அவர்களின் கழுகுத்தனம் உன் மீது
கட்டவிழ்க்கப் பட்ட போதிலும்
உன் சுதந்திர எண்ணம் கட்டின்றி நகரும்.

ஃ ஃ ஃ

ஆண்டுகள் ஏழு ஆனாலும் என்ன
ஆறாது ஆறாது உன் நினைவு
ஆட்சிகள் நூறு மாறினால் என்ன
மாறாது மாறாது உன் கனவு.

ஃ ஃ ஃ ஃ ஃ

தற்போதைய முகவரி:
பாரத் வீதி,
மானிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர், நண்பர்கள்

(9344)

## சிந்தனைக்கு..

எல்லாம் வெற்றி எய்திய அந்த நிமிடம் வரை எல்லாம் பறிபோகவில்லை.

- நெப்போலியன் பொனபாட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 12-09-1994

தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண் 05

## டி பி யின் துறவு

சிறிலங்காவின் ஜனாதிபதியான டி. பி. விஜேதுங்கா அரசியற் துறவறம் பூண முடிவு செய்து விட்டதாகவே தெரிகின்றது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலையால் எதிர்பாராமல், அதிர்ஷ்டவசமாக கிடைத்த ஜனாதிபதிப் பதவிக்காக மீண்டும் ஒருமுறை தனது அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பார்க்க ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தயாராக இல்லை என்பதே இன்றைய நிலையாகும்.

டி. பி. விஜேதுங்காவின் இம்முடிவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்கப்போவதில்லை என்ற அவரது அறிவிப்பாகும்- இம்முடிவானது தனியாக அவர் ஜனாதிபதிப் பதவியில் இருந்து ஒதுங்குவதாகமட்டும் அமையாது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்தும், ஏன் தனது அரசியல் வாழ்க்கையில் இருந்தும் ஒதுங்குவதற்கான நடவடிக்கை என்றே கூறவேண்டும்-

ஆனால் டி பி விஜேதுங்காவின் முடிவானது தேர்தல் தோல்வியின் பின்னர் எடுக்கப்பட்ட ஒரு திடீர் முடிவென முற்றிலுமாகக் கருதிவிடக் கூடாது- இது கடந்த மாதம் பாராளுமன்றத் தேர்தல் நடப்பதற்கு இருமாதங்களுக்கு முன்னரே அவரால் சிந்திக்கப்பட்டதொன்றாகவே இருந்தது- இதன்படியே பாராளுமன்றத் தேர்தலை ஒரு பரீட்சார்த்தக் களமாக டி பி விஜேதுங்கா பயன்படுத்தினார் என்றே கூறமுடியும்-

இவ்வருடம் நடத்தப்பட வேண்டிய தேர்தலாக ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே இருந்த நிலையிலும், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்பட வேண்டிய பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த அவர் முடிவு செய்தமை இதன் அடிப்படையிலானதே ஆகும்- ஐக்கிய தேசியக் கட்சியில் பலர் இதனை விரும்பாதபோதும் ஜனாதிபதி டி பி விஜேதுங்கா அதனை ஏற்றுக்கொள்ளவில்லை-

இந்நிலையில், டி.பி விஜேதுங்கா தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் அதாவது ஜனாதிபதி தேர்தலில் வெற்றி வாய்ப்பு அற்றதென்ற நிலையில் தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொண்டமை பெரும் ஆச்சரியமானதொன்றுமல்ல- பொதுவாக எதிர்பார்க்கப்படக் கூடியதொன்றுதான்.

ஆயினும், ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவின் இம்முடிவானதுமுழுமையாக தன்னிச்சையான ஒரு முடிவு என்றும்கூறிவிட முடியாது-ஒருவகையில் அவர் 'கௌரவமாக' வெளியேறினாலும், பாராளுமன்றத் தோல்வியின்



### பாரதி நினைவு நாள்

# இறுதிவரை நம்பிக்கை இழக்காத புரட்சிக்கவி பாரதியார்

பேராயர் எஸ். ஜெபநேசன்
அத்தியட்சர், தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம்

செப்டம்பர் மாதம் 11-ம் திகதி பாரதி நினைவுதினம் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் இப்புனிதனின் சேவை நன்றியுணர்வுடன் நினைவு கூரப்படுகின்றது. பாரதி மனுக்குலத்திற்காற்றிய மிகப்பெரும் சேவையென்ன? இவரின் வாழ்க்கை வரலாற்றினையெழுதிய வ.ரா. அவர்கள் பின்வருமாறு தனது நூலை நிறைவுசெய்கின்றார்.

''பொழுது புலர்ந்ததையும் புன்மை இருட்கணம் போனதையும் பாரதியார், தமது இளம் பிராயத்திலேயே தாம் சம்பந்தப்பட்ட வரைக்கும் தெளிவாகத் தெரிந்து கொண்டார்.

இந்த நம்பிக்கையைத்தான் வளர்த்துக் கொண்டதோடு அமையாது ஏனைய மக்களும் அதனை உணர்ந்து கொள்ளும்படியாகச் செய்தார். பாரதி ஓர் இன்முகச்செவ்வியர் (OPTIMIST) ஆக வாழ்ந்ததே அவருடைய பெருஞ் செயலாகும்.

பாரதி பிறப்பதற்கு ஆறு வருடங்களுக்கு முன்னர் தான் ''இந்தியாவின் சக்கரவர்த்தினி'' என்ற பட்டம்கிடைத்ததனையிட்டுப் புளகாங்கிதமடைந்த விக்டோரியா மகாராணியார் பின்வருமாறு எழுதினார்:

இந்திய மக்கள் எமது அரச குலத்தின் மீதும் அரியணை மீதும் கொண்டுள்ள விசுவாசத்தினது பற்றினதும் சான்றினைக்கண்டு விக்டோரியா ஆகிய யாம் உணர்ச்சிவசப்பட்டோம்.

இந்தியாவின் மீது ஆங்கிலேயரின் பிடி அசைக்க முடியாதிருந்த காலகட்டத்திலே தான், சுதந்திர இந்தியாவில் மேற்கொள்ளவேண்டிய பணிகளைக் குறித்து மக்களுக்குக் கூறினார்.

''காவியம் செய்வோம் நல்ல காடுகள் வளர்ப்போம் கலை வளர்ப்போம் கொல்லர் உலைவளர்ப்போம்''

பாரதிக்கு உலகத்தின் தொல்லைகள் பலவிருந்தன எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு முற்றுந்துறந்த துறவியாகவல்ல. மனோதிடமும்; ஆன்மீக பலமுமிருந்தன ஆனால் அவர் துறவியாக மாறிவிடவில்லை: மக்களை விட்டு ஓடிவிடவில்லை இந்த உலகம் நல்லதென்று அவர் கண்டார். ஏனைய மக்களும் அப்படியே நம்பவேண்டுமென்று உழைத்தார்.

''இவ்வுலகம் இனியது இதிலுள்ள வான் இனிமையுடைத்து காற்று இனிது நீர்இனிது நிலம் இனிது'' என்பது அவருடைய சிந்தனைத் தெளிவினைக் காட்டுகின்றது பாரதிக்கு நம்பிக்கை வரட்சியை ஏற்படுத்தக்கூடிய பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டன.

''தந்தை போயினன் பாழ்மிடி சூழ்ந்தது தரணி மீதினில் அஞ்சலென் பாரிலர் சிந்தையில் தெளிவில்லை உடலினில் திறனுமில்லை உரனுளத்தில்லையால்...எந்த மார்க்கமும் தோன்றிய தென் செய்கேன் ஏன் பிறந்தனன் இத்துயர் நாட்டிலே'' என்ற உள்ளக்குமுறலைக் கேட்கின்றோம்.

ஆனால் அவர் ஒருபொழுதும் நம்பிக்கையை இழந்துவிடவில்லை.

'எனினும் இங்கிவையெலாம் இறைவன் அருளால் நீங்குவவன்றி நிலைப்பனவல்ல''

என்பது பாரதியின் வாழ்க்கைத் தத்துவம்
தன்னைப் போல் ஏனைய மக்களும் நம்பிக்கையைப் பெற வேண்டுமென்று உழைத்தார்-

'தமிழா தெய்வத்தைநம்பு' பயப்படாதே உனக்கு நல்ல காலம் வருகிறது''

என்று வரப்போகின்ற காலம் உன்னுடையது தான் என்று மகிழ்வூட்டினார்.

உலகத்திலே ஒரு மனிதன் செய்யக்கூடிய மிகப்பெருஞ் சேவை தன்னைச் சூழவுள்ள மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவது தான்- சுகமடைவேன் என்ற நம்பிக்கையிலே தான் நோயாளி சுகமடைகின்றான், தொழில் சரிவர நடைபெறும் என்ற நம்பிக்கையிலேதான் முதலீடு செய்யப்படுகின்றது. பரீட்சையில் சித்தி கிட்டும் என்ற நம்பிக்கையிலே தான் மாணவன் படிக்கின்றான். உலகமே இந்த நம்பிக்கையிலே தான் நடக்கிறது- நம்பிக்கையைக் கெடுப்பவன் சமுதாயத்தையே அழிக்கின்றான். முன்னொரு காலத்தில் ஒரு சம்பூரமான சோர்புவாதி (Pessimist) இருந்தான். அவனுக்கு ஒரு தொழிலும் கைகூடவில்லை. தொப்பி செய்யும் தொழிற்சாலை ஆரம்பித்தால் வெற்றியளிக்கும் என்று நினைத்தான் அப்பொழுது அவன் உள்ளத்தில் மீண்டும் சோர்வு வந்துவிட்டது- இனிப்பிறக்கும் மனிதர்கள் தலையில்லாமலே பிறந்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்தான்-தொப்பித் தொழிற்சாலையும் கைவிடப்பட்டது.

பாரதி என்ற இன்முகச் செவ்வியர் [Optimist] இறுதி வரை நம்பிக்கை குன்றாதவராகவே வாழ்ந்த தத்துவ ஞானி-

பின்வருவன அனுபவம் என்னும் பள்ளியில் அவர் கற்றுக் கொண்ட பாடங்கள்

''பொய்மை இரட்டுற மொழிதல் நயவஞ்சனை நடிப்பு- இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப்பிழைப்பு என்று கொள்வேன்''

இடையறாது தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெறமுயல்வேன் இயலாவிடின் விதிவசமென்றிருப்பேன்

பொழுது வீணே கழிய இடங்கொடேன் லௌகிக காரியங்களை ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் அவை தோன்றும் பொழுதே பிழையறச் செய்து முடிக்கப் பழகுவேன்.

உடலை நல்ல காற்றாலும் இயன்றவரை சலிப்பதாலும் தூய்மையுறச் செய்வேன்.

மூடரின் உள்ளத்தில் என்னைப் பற்றிய பொய் மதிப்பு உண்டாக இடங்கொடேன்

''மறைந்தும் தற்புகழ்ச்சி விரும்பேன்''

இவை பாரதியின் வாழ்க்கை எவ்வளவு கட்டுப்பாட்டுடன் காணப்பட்டது என்பதற்குச் சான்றுகள். இதனாலே தான் கவிஞர் அப்துல் ரஹ்மான்,

'பாரதி உன் கவிதையை விட உன் வாழ்க்கை அழகானது'' என்று குறிப்பிட்டார்.
பாரதி உலகிலே தோன்றிய மகான்களைப் போல மக்கள் இன்புற்றிருக்க வழி கூறியவர் உலகத்தில் மனிதரில், உழைப்பில், உண்மையில் நம்பிக்கையை வளர்த்தவர். தமிழ்மக்களுக்குக்கிடைத்த மிகப்பெரும் நம்பிக்கை நட்சத்திரம்பாரதி விசுவாசமென்பது நம்பப்படுகின்றவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது என்று ஜேம்ஸ் நிருபம் கூறுகின்றது.

(FAITH gives substance to our hopes and convince us of the realities we do not see) பாரதி தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்ற சமுதாயத்திற்கு நல்ல நம்பிக்கையைக் கொண்டுவரப் பாடுபட்டவர். அவரின் புனித நாமம் போற்றற்குரியது.

# பாகிஸ்தானிடம் அணுகுண்டு ஐ. நா. செயலாளர் கவலை

(டில்லி)

பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருப்பதாக வெளிவந்த செய்திகள் தொடர்பாக பூட்ரஸ்காலி கவலை தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் பாகிஸ்தானிடம் அணு ஆயுதம் உள்ளது என்று முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீப் சமீபத்தில் கூறியிருப்பது தம

# திஸ்ஸமாரகம ஐ. தே. க. அலுவலகம் தீக்கிரை

(கொழும்பு)

திஸ்ஸமாரகமவில் உள்ள ஐ தே. க. பிரதான அலுவலகம் தீவைக்கப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளது பெறுமதிவாய்ந்த கடித கோவைகளும் தொலைபேசியும் தீயினால் அழிந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிசார் தீயை அணைத்த போதிலும் கட்டிடத்திற்கு கணிசமான அளவு சேதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

றும்கூறிவிட முடியாது-ஒருவகையில்அவர் 'கௌரவமாக' வெளியேறினாலும், பாராளுமன்றத் தோல்வியின் பின்னர் அவர் பின்னணியில் இருந்து வெளியே தள்ளப்பட்டார் என்று கூறுதல்கூட ஒருவகையில் பொருத்தமானதே.

பாராளுமன்றத் தேர்தல் தோல்வியின் பின்னர் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியைத் தட்டிப்பறித்துக் கொண்ட காமினி திசாநாயக்கா ஒருவகையில் தன்னை ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக்குவதற்கான நடவடிக்கையில் தீவிரமாகவே இறங்கினார். இந்நிலையிம், காமினி திசாநாயக்காவை எதிர்த்துக் கொண்டு டி பி விஜேதுங்காவால் கட்சிக்குள் ஆதரவைத் திரட்டும் வாய்ப்பு பெறக் கூடிய சூழ்நிலை இருக்கவில்லை.

ஏற்கனவே ஐ தே கட்சியின் பிரதித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த காமினி திசாநாயக்கா தலைமைப் பதவியில் குறியாக இருந்தார். தேர்தல் தோல்வி குறித்து ஆராய்ந்த ஐ தே கட்சிக் கூட்டத்திற்கு 'சுகவீனம் காரணமாக' ஜனாதிபதி டி பி விஜேதுங்கா சமுகமளிக்காதவேளை காமினியே அக்கூட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தினார். இது ஒருவகையில் தலைமைத்துவ வெற்றிடத்தை தேவை கருதி காமினி திசாநாயக்கா நிரப்பிக் கொண்டதாக இருப்பினும் மறுவளமாக டி பி விஜேதுங்காவிற்குப் பாதகமான நிலையில் ஐ தே க கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார் என்றும் கூறலாம்.

ஆனால் எது காரணமாக இருப்பினும் டி பி விஜேதுங்க ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகியமையானது /விலக்கப்பட்டமையானது ஐக்கியதேசியக்கட்சியைப் பொறுத்து பெரியளவிலான பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை என்றே கூறலாம். ஏனெனில் டி-பி-விஜேதுங்க கடந்த ஒருவருட ஆட்சிக் காலத்தில் தனது தலைமைத்துவத்தை திறம்பட வெளிக்காட்டவில்லை என்றே கூறலாம். சரியான வழிமுறைகளைக் கையாளாதுவிடினும் - இவர் அதைப் புறக்கணித்தவரும் அல்ல. கூட இவரால் ஐதேகவிற்குத் தலைமை கொடுக்க முடியவில்லை. இந்நிலையில் சுமார் 16 வருடங்கள் ஆட்சியில் இருந்த ஜே ஆர் ஜெயவர்த்தனா, ஆர் பிரேமதாசா ஆகியோர் வரிசையில் இவர் இடம்பெற முடியவில்லை என்றே கூற வேண்டும்.

இதேசமயம் முன்னைய சிங்கள ஆட்சியாளர்களைப் போன்றே இவரும் பௌத்த-சிங்களப் பேரினவாதிகளுக்கு மட்டுமே தலைமை தாங்க முற்பட்டார். இதன் மூலம் யுத்தத்தை நீடிக்கவும், உயிர் அழிவுகள் மற்றும் பொருள் அழிவும் ஏற்படுத்துவதற்கும் காரணமாகவே இருந்தார். இந்நிலையில் டி-பி. விஜேதுங்கவின் வெளியேற்றமானது கட்சிக்கும், நாட்டிற்கும் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தக் கூடியதாக இல்லை என்றே கூறலாம்

குண்டு இருப்பதாக வெளிவந்த செய்திகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பூட்ரஸ் புதுடில்லியில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில்,

சமீபத்தில் கூறியிருப்பது தமக்கு மிகவும் கவலை அளிப்பதாக இருக்கிறது என்றும் இந்தியாவும், பாகிஸ்தானும் அனைத்து பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்

இரு நாடுகளுக்கும் இடையில் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக ஆக்கபூர்வ பேச்சுவார்த்தை நடத்த ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும் இரு நாடுகளு-ம் தாம் நடத்திய பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக அமைந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

ளும் தொலைபேசியும் தீயி ... படுகிறது.

# இந்தியப்படை கொலை; பாகிஸ்தான் பின்னணியில்?

## விசாரணையும் நடக்கும்

(டில்லி)

சோமாலியாவில் ஐ நா. அமைதிகாப்பு நடவடிக்கையின் போது இந்தியப் படையினர் சிலர் கொல்லப்பட்டதில் பாகிஸ்தான் தொடர்புபட்டுள்ளதா என விசாரணை நடைபெறுவதாக இந்திய வெளியுறவு இணையமைச்சர் ஆர் எல். பாட்டியா கூறியுள்ளார்.

இதற்காக இராணுவ மூத்த அதிகாரி ஒருவரை சோமாலியவுக்கு இந்தியா விரைவில் அனுப்பும் என்றும் அமைச்சர் கூறினார்.

# தொலைத்தொடர்பு வசதி சீரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு தொலைத் தொடர்பு வசதிகள் சீராக்கும் திட்டத்தின் கீழ் தற்சமயம் கிழக்கு மாகாணத்தில் தொலைத் தொடர்பு வசதிகளை விரிவாக்க அஞ்சல் தொலைத் தொடர்புவசதிகள் பிரதி அமைச்சர் இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதற்கான நடவடிக்கையை சிறிலங்கா டெலிக்கொம் கூட்டுத்தாபனம் எடுத்துள்ளது.

மிகவிரைவில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலத்துள் பூர்த்தி செய்யப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் 24000 புதிய தொலைபேசி இணைப்புவசதிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் பின்வரும் பரிவர்த்தனை நிலையங்கள் விரிவாக்கப்படவுள்ளன: கல்முனை 6024 இணைப்புக்கள் அம்பாறை 4000 இணைப்புக்கள் மட்டக்களப்பு 7000 இணைப்புக்கள் திருகோணமலை 4000 இணைப்புக்கள் வவுனியா 2500 இணைப்புக்கள் ஆகியன.

# ஹெய்டி மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா தயாராகிறது

(வாஷிங்டன்)

ஹெய்டியில் இராணுவ அரசை பதவியிலிருந்து நீக்கும் வகையில், அந்த நாட்டின் மீதான இராணுவ நடவடிக்கைகளுக்குத் தயாராகும் விதத்தில் கடற்படைக் கப்பல்களை அமெரிக்கா அனுப்பியுள்ளது.

ஹெய்டியை நோக்கி விமானந் தாங்கிக் கப்பலொன்றையும் அமெரிக்கா அனுப்பியுள்ளது. பல நாடுகள் பங்குபற்றும் இவ் ராணுவ நடவடிக்கைக்கு இக்கப்பல் தலைமை தாங்கும்.

அமெரிக்கா தலைமையிலான இராணுவ நடவடிக்கைகளுக்கு 300 கரிபியன் வீரர்களும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளனர்.

# ஐ. நா. அமைதிப்பணியில் இந்தியா பங்களிக்கும்

## ஐ. நா. செயலரிடம் பிரதமர் ராவ்

(டில்லி)

ஐ. நா அமைதிகாப்புப்பணியில் இந்தியா தொடர்ந்து பங்களிப்பு செய்யும் என பிரதமர் நரசிம்மராவ் ஐ. நா பொதுச் செயலர் பூட்ரஸ் காலியிடம் தெரிவித்துள்ளார். டில்லி வந்துள்ள காலியுடன் ராவ் 45 நிமிடங்கள் பேச்சு நடத்தினார். ருவாண்டாவிற்கு மேலதிக படைகள் அனுப்பவும் இதன்போது பிரதமர் ராவ் இணக்கம் தெரிவித்தார்.

பூட்ரஸ் காலி திருமதி சோனியா காந்தியையும் சந்தித்து பேசினார். இந்தியாவில் தனது மூன்று நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு திரும்பிய பூட்ரஸ் காலி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடையே பேசியபோது, இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையேயான கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க அரசியல் மன உறுதியை காட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# யுரேனியம் பிடிபட்டது

மத்திய ரஷ்ய நகரமொன்றிற்கு அருகேயுள்ள தொழிற்சாலை ஒன்றிலிருந்து திருடப்பட்ட நூறு கிலோகிராம் யுரேனியம் ரஷ்யப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 'இன்டெர்பெக்தா' செய்தி நிறுவனம் மேலும் தெரிவிக்கையில், மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது; எனினும் இம் மூவரும் அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நினைவுப் பேருரைகள்

லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையாக சைவ சித்தாந்தம் பற்றிய விரிவுரையை இன்று திங்கள் பிற்பகல் 3 00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் பண்டிதர் எம். சந்தையா ஆற்றுவார்

சேர். பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரையாக விஞ்ஞானமும் தொழில்நுட்ப கல்வியும் என்ற பொருளில் பொறியியல் துறை பேராசிரியர் வி. நவரட்ணராஜாவின் விரிவுரை நாளை செவ்வாய் பிற்பகல் 3. 00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்

# விநியோகம்

(தென்மராட்சி)

கடந்த காலத்தில் வெள்ளத்தால் பாதிப்புற்ற 50 குடும்பங்களுக்கு யாழ் செஞ்சிலுவைச் சங்க மீசாலை கிழக்கு பிரிவு செஞ்சிலுவைசங்கத்தினர் இலவசமாக உடுபுடவைகள், பாத்திரங்களை வழங்கி வருகின்றனர் என செயலாளர் திரு. கணேசன் தெரிவித்தார்.

## புலிகளின் குரல்

### நிகழ்ச்சி நிரல்

1994.09.12

திங்கள் இரவு

08 01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08 20 - செய்திச்சரம்
08.30 - செய்திகள்
08.40 - தரிசனம் - விசகடி வைத்தியர் அரியாலையூர் சபஞ்சாட்சரம் அவர்களுடனான செவ்வி

1994.09.13

செவ்வாய் காலை

07 02 - மாவீரவணக்கம்
07 15 - இன்றையதாரகை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப்பாடல்கள்

# எகிப்திய சிறையில் 9 வருடமாக கவனிப்பற்று வாடும் 21 தமிழர்

(லண்டன்)

எகிப்து சிறைச் சாலையில் இலங்கைத் தமிழர் இருபத்தியொருபேர் 1985-ம் ஆண்டு தொடக்கம் சிறைவாசம் அனுபவித்து வருவதாகத் தெரியவருகிறது

இவர்கள் ஒன்பது வருடமாக தொடர்ந்து சிறைவாசம் அனுபவிக்கின்றபோதும் மருத்துவ வசதிகள் கூட மறுக்கப்பட்டு வருவதாகவும் சிறிலங்கா தூதராலயத்தை சேர்ந்தவர்கள் இவ் ஒன்பது வருடகாலத்தில் நான்குமுறை மட்டும் அவர்களைச் சென்று பார்வையிட்டதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை நாற்பத்திஐந்து நாடுகளைச் சேர்ந்தவர்கள் அந்த சிறையில் இருக்கின்றனர் எனவும், இவர்களை அந்த நாட்டு தூதுவராலயத்தை சேர்ந்தவர்கள் மாதாந்தம் வந்து பார்ப்பதாகவும் தமிழர் என்ற காரணத்தினால் இவர்களை பார்க்க தூதுவராலய வட்டாரம் பின்னிற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறிலங்கா வெற்றி

சிங்கர் வெற்றிக் கிண்ணத்திற்கான நான்கு நாடுகளுக்கு இடையே நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் சிறிலங்கா, பாகிஸ்தான் அணியை 7 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. கொழும்பு எஸ். எஸ். ஸி மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடி ஆறு விக்கட் இழப்பிற்கு 210 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பின்னர் ஆடிய சிறிலங்கா அணி 48 ஓவர்களில் மூன்று விக்கட் இழப்பிற்கு 213 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

# விடுதலைப் புலிகளுடன் பேசி பிரச்சினைக்கு தீர்வு காண்க'

### கொழும்பு அதிமேற்றாணியார் சந்திரிகாவிடம்கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்து வைக்குமாறு கொழும்பு அதிமேற்றாணியார் தம்மைச் சந்தித்த புதிய பிரதமரை கேட்டுக் கொண்டார்.

புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க அண்மையில் கொழும்பு அதிமேற்றாணியார் நீக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோவைச்சந்தித்த வேளையில் விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தைகளை நடாத்தி இனப் பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்துவைத்து எமது சகோதர தமிழ் சிங்கள மக்கள் படும் யுத்த அனர்த்தங்களில் இருந்து அவர்களை காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டார். இதுவே இன்று எம் அனைவர்மத்தியில் இருக்கும் அதிமுக்கியமானவிடயமாகும் என அதி மேற்றாணியார் தெரிவித்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. (88)

# வடபகுதி ராணுவ முகாமிலிருந்து றாலுடன் கொழும்பு திரும்பிய அதிகாரி

(கொழும்பு)

அண்மையில் வடபகுதி முகாம்களுக்கு வந்து சென்ற பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்தவுடன் வந்த ஒரு இராணுவ உயர் அதிகாரி வடபகுதி முகாம்களில் இருந்து சேகரித்த மீன், மரக்கறி, பழங்கள் மற்றும் ஏனைய சில பொருட்களை தம்முடன் கொழும்பிற்கு எடுத்து சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

இவ்விடயம் தொடர்பாக வட பகுதி இராணுவ அதிகாரிகள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். மேற்குறித்த அதிகாரிதான் வட பகுதிமுகாம்களுக்கு வரும் சமயத்தில் தனக்குக் கீழ் உள்ள வடபகுதி அதிகாரிகளிடம் தனக்கு வேண்டிய இறால், நண்டு, மீன், வெங்காயம், மாம்பழம் மற்றும் வேறு சில உணவு வகைகளை தமக்கு வழங்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தாராம் இதன் படி கனிஷ்ட அதிகாரிகள் இவர் வரும் ஹெலிகப்டரில் பலாலியில் வைத்து உணவுப் பொதிகளை ஏற்றி வைப்பர் இதன் பின் இவை இராணுவ வாகனங்களில் அவரின் கொழும்பில் உள்ள வீட்டிற்கு போய்ச் சேரும்.

அவ்வாறே இம் முறையும் அவர் பிரதி பாதுகாப்பு அமைச்சருடன் வந்திருந்த போதும் நடந்து கொண்டதாக வடபகுதி இராணுவ அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## குடியிருப்புகள் சேதம்

சிறிலங்காவின் மலையகப் பகுதியை சேர்ந்த டெல்றி தேட்டத்தின் களுகாடிவில் வுனில் தொழிலாளர் குடியிருப்புக்கள் சேதமாக்கப்பட்டதுடன், தொழிலாளர்களுக்கும் காயம் விளைவிக்கப்பட்டுள்ளது இச்சம்பவத்தில் ஐந்து தொழிலாளர்கள் காயம் அடைந்துள்ளனர். இத் தாக்குதலுக்கு அரசியல் காரணங்களே பின்னணியில் இருப்பதாக கூறப்படுகிறது.

# ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளராக காமினி போட்டியிடாது விட்டால் ரணில் போட்டியிட தயாராயிருந்தார்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதற்கான குழு நேர்முகத்தேர்வுக்கு ரணில் விக்கிரமசிங்காவை முதலில் அழைத்ததாகவும் பின்னர் காமினி திசாநாயக்காவை அழைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: கடந்த வெள்ளியன்று ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா தாம் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனவும் புதிய வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யும் பொறுப்பு செயற்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்சித் தலைவர் டி. பி. விஜேதுங்கா தலைமையில் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும் வேட்பாளர் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. கட்சியின் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா, கணேசலிங்கம், ஏ. சி. எஸ். ஹமீத், விஜயபால மெண்டிஸ் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகித்தனர்.

இக்குழு முன்னாள் பிரதமரும் கொழும்பு மாவட்ட எம். பியுமான ரணில் விக்கிரமசிங்காவை முதலில் நேர்முக விசாரணைக்கு அழைத்தது கட்சியின் தலைவர் டி. பி விஜேதுங்கா போட்டியிட விரும்பாவிட்டால் எதிர்க்கட்சித்தலைவர் காமினி திசாநாயக்கா போட்டியிட வேண்டும். அவர் போட்டியிட விரும்பினால் தான் வேட்பாளர் போட்டியிலிருந்து விலகுகிறேன். அவர் போட்டியிடவிரும்பாவிட்டால் நான் போட்டியிடுகிறேன் என ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா நேர்முக விசாரணைக்கு அழைக்கப்பட்டார்

"நான் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட விரும்புகிறேன் என காமினி திசாநாயக்கா தெரிவித்தார். இதனையடுத்து காமினி திசாநாயக்காஜனாதிபதி வேட்பாளராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்

மேற்படி முடிவை அங்கீகரிப்பதற்கென ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு எதிர்வரும் அக்டோபர் மாதம் ஏழாம் திகதி கூடவுள்ளது.

# மதிலை உடைத்துக்கொண்டு உட்புகுந்த கார்

(தென்மராட்சி)

வீதியால் சென்ற கார் மதிலை உடைத்து உட் புகுந்ததில் சாரதி படுகாயம்

சாரதி படுகாயம் அடைந்தார்.

நேற்று பிரதான வீதியால் சென்று கொண்டிருந்த கார் திடீரென நாவற்குழி நீர்ப்பாசன திணைக்களத்தினுள் மதிலை உடைத்துக் கொண்டு உட்புகுந்ததால் காரின் சாரதி தலையில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆரியாலையைச் சேர்ந்த திரு ஆர். நாகராசா (வயது 22) என்பவரே படுகாயம் அடைந்தவராவார் இக்காரில் பயணம் செய்த நால்வரில் ஒருவர் காலில் சிறுகாயம் அடைந்தார் ஏனையோர் காயமின்றி தப்பிவிட்டார்கள். (86)

## வடபகுதி

தமது வாசஸ்தலத்தில் சந்தித்து உரையாடிய போதே ஆயர்கள் பிரதமரை மேற்படி கேட்டுக்கொண்டனர்.

இச்சந்திப்பின் போது பிரதமருடன் அவரின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கதிர்காமர், அமைச்சர் பீரிஸ் ஆகியோர் உடன் இருந்தனர். (88)

## ஆனையிறவு

இது காலதாமதத்தை ஏற்படுத்தும். ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம்எனவும்குறிப்பிட்டார்.

## தலைவர்

நீக்குவதன் மூலமும் இதனை ஆரம்பிக்கலாம் மீன் பிடிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள தடையானது ஒரு இராணுவத் தடையாகத் தோன்றவில்லை-

வடபகுதி மக்கள் பாதுகாப்

சிங்காவிடம் தாம் தெரியப்படுத்தியதாக சின்னமணி கூறினார்.

அவர் மேலும், தமிழ் மக்களுக்கும் சிங்களமக்களுக்கும் எனது ஒருமைப்பாட்டைத் தெரிவிப்பதுஎன்து இந்தவிஜயத்தின் நோக்கம்.எனதுபிறந்த

# ராணுவச் சதி குறித்து விசாரணைக்கு உத்தரவு

முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்திபரட்ணவின் ஆதரவாளர்கள் புதிய அரசிற்கு எதிராக மேற்கொள்ள விருந்ததாக நம்பப்டும் இராணுவ சதி குறித்து முழுமையான விசாரணை ஒன்றை நடத்துமாறு ஜனாதிபதி விஜேதுங்க சி ஐ டி யினரைப் பணிததுள்ளார்.

இது குறித்த விசாரணை அறிக்கையை தம்மிடம் சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார்- விசாரணைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. சதி குறித்து சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து சி ஐ டி வாக்கு மூலம் பெறவுள்ளது.

இச்சதியுடன் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படும் இராணுவ அதிகாரிகள் நிலை தலைவர் மேஜர்ஜெனரல் லக்கி அல்கம, பிரிகேடியர் சரத் பொன்சேகா, கேணல் காமினி குணசேகரா மற்றும் வேறுசில அதிகாரிகளும் தம் மீது வீழ்ந்த அவப்பெயரை களைய இது குறித்து உடனடி விசாரணைக்குழுவை அமைக்குமாறு அண்மையில் ஜனாதிபதியைக் கேட்டிருந்தனர். தமது நிலைப்பாடு குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமைக்கும் விளக்கி கடிதம் எழுதியிருந்தனர்.

### அரசியல் பழிவாங்கல் காரணமாக

# பதவி உயர்வு மறுக்கப்பட்ட ஊழியர் குறித்து கவனம்

(கொழும்பு)

1977 இலிருந்து அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்ட

கிறது

அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள். திணைக்களங்கள் என்பனவற்றில் பதவி

# தமிழர் பிரச்சினை தீர்வில் புலிகளே முக்கிய அங்கம்

### புளொட் குழுத்தலைவர் தெரிவிப்பு

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புதிய அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று ஏற்கனவே பல தடவை கூறியுள்ளோம். தமிழ்மக்களின் பிரச்சினையில் விடுதலைப்புலிகள் முக்கிய அங்கம் என்பதையும் அரசிற்கு எடுத்து விளக்கியுள்ளோம். விரைவில் யுத்த நிறுத்தம் என்ற ஒன்று வரும்போது தமிழீழ விடுதலைப் புலிகளையும் அரசையும் கட்டுப்படுத்துவதாக அது இருத்தல் வேண்டும். இவ்வாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறினார்.

கேள்வி: புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின்போது உங்கள் பங்களிப்பு எவ்வாறு அமையும்?

பதில்: புலிகளுடனான பேச்சுவார்த்தை என்னும்

பூர்த்தி செய்யும் வகையில் அமைவது எமது திறமையைப் பொறுத்தது, தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்து முன்வைக்கும் தீர்வைத் தமிழ் மக்கள் சார்பாக எந்த இயக்கமோ அரசோ ஏற்றுக்கொள்ளாமல் தட்டிக்கழிப்பார்களேயானால் அவர்கள் மக்களிடமிருந்து அன்னியப்படுவதையும் தவிர்க்க முடியாது.

கேள்வி: கடந்த ஆண்டு ஐ. தே. கட்சியை ஆத

டுள்ள தடையானது ஒரு இரா ணுவத் தடையாகத் தோன்ற வில்லை-

வடபகுதி மக்கள் பாதுகாப் பாக பயணம் செய்வதை உறுதிப்படுத்தவும் பொருள்க ளைச் சிரமமின்றி கொண்டு செல்ல வசதியாகவும் ஆனை யிறவுப்பாதையைத் திறப் தற்கு அரசாங்கத்துடன் ஒத் துழைக்கத் தயாராக இருப் பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்ற போதி லும் அப்பாதையூடாகச் செல் லும் பொதுமக்களை படை யினர் சோதனை செய்யக் கூடாது. இதற்கான உறுதி மொழியை அரசாங்கம் தர வேண்டும் என்று ஒரு நிபந் தனையை விதித்திருக்கிறார் கள் என்றார்.

ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு புலிகள் இயக் கம் விதித்திருக்கும் இந்த நிபந்தனையை சிறிலங்கா வின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வன

ளுக்கும் சிங்களமக்களுக்கும் எனது ஒருமைப்பாட்டைத் தெரிவிப்பதுஎனது இந்தவிஜய த்தின் நோக்கம். எனதுபிறந்த நாடான இலங்கையை நான் நேசிக்கிறேன் சிங்கள மக்க ளில் பிழையில்லை பொறுப் பற்ற அரசியல் தலைமைத் துவமே இந்த நிலைமைக்குக் காரணம் புதிய பிரதமர் சந் திரிகா குமாரணதுங்கவின் அணுகுமுறையை பாராட்டி அவருக்கு நான் கடிதம் அனு ப்பியுள்ளேன்.

ஐந்து மாதங்களுக்கு முன் நான் யாழ்ப்பாணம் விஜயம் செய்த போது ஆனையிறவு பாதையை திறக்க ஒத்துழை க்குமாறு நான் கேட்டிருந் தால் அதை புலிகள் யதார் த்தமற்றது என்று கூறி உத றித்தள்ளியிருப்பார்கள் தற் போதைய அவர்களுடைய நிலை புதிய அரசாங்கத்தின் மேல் வைத்துள்ள நம்பிக்கை யை எடுத்துக் காட்டுகின்றது எனவும் தெரிவித்தார்.

(கொழும்பு)

1977 இலிருந்து அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகள் காரணமாக பதவி உயர்வு மற்றும் வேலைகளை இழந் தோருக்கு நீதிவழங்க சிறி லங்காவின் புதிய அரசு நட வடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவின் பணிப் புரையின் பெயரில் இந்தத் திட்டம் நடைமுறைக்குஇடப் படுகின்றதாக தெரிவிக்கப்படு

**தமிழ்**

சிங்கள மக்களில் பெரும்பான் மையினர் இனவாதத்தை ஆதரிக்கவில்லை. தமிழர் பிரச்சினையை சமாதான வழியில் தீர்க்கவேண்டும் என ஆவல்படுகின்றனர்.

இவ்வாறு புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார். தங்களின் சமாதான முன்னெடுப்பு வெற்றியளிக்க சிங்கள இன வாதிகள் அனுமதிப்பார்களா? என யாழ். ஆயர் கேட்டத ற்கே புதிய பிரதமர் மேற் கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பிரதமர் தெரி விக்கையில் சமாதான முயற் சிகளின் அவசியம் பற்றியும் யுத்தத்தினால் இலாபம் இல் லை என்பது பற்றியும் தாம் சிங்கள மக்கள் மத்தியில் தேவையான இடங்களில் தேவையான விளக்கங்களை கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர் பல இடங் களில் மக்கள் மத்தியில் தாம் உரையாற்றும் போது சமா தானத்தீர்வை நோக்கி விடு தலைப்புலிகளுடன் நேரில் சென்று பேசப்போகின்றேன் என தெரிவித்ததும் அமோக வரவேற்பு காணப்பட்டதா கவும் மக்களில் பெரும் பகுதி யினர் சமாதானத்தையே விரும்புவதாகவும் தான் முன் னின்று அதைச் செயற்படுத் தப் போவதாகவும் மேலும் யாழ். ஆயரிற்கு தெரிவித்தார். (88)

கிறது

அமைச்சுக்கள், கூட்டுத் தாபனங்கள். திணைக்களங் கள் என்பனவற்றில் பதவி உயர்வுகளையும் வேலைகளை இழந்தவர்கள் சம்பந்தமான சகல தகவல்களையும் தமக்கு அனுப்பி வைக்குமாறு பிரத மரின் செயலாளர் சகல அமை ச்சுக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

1980ல் பொது வேலைநிறுத்த த்தில் ஈடுபட்டதற்காக பெரும ளவானோர் தமது வேலைகளை இழந்துள்ளனர். அவர்கள் அனைவரும் வேலை இன்றி மிகக் கஷ்டமான நிலையில் உள்ளதுப குறி பிடத்தக்கது-

**ராணுவப்**

செய்யப்பட்டவர்களான இராசநாயகம் றொட்றிக்கஸ் (வயது 15), செல்லையா திரு ஞான ஈஸ்வரன் (வயது 33) ஆகியோரும் சர்வதேச செஞ் சிலுவை சங்கத்தினரிடம் ஒப் படைக்கப்பட்டு அவர்களின் அனுசரணையுடன் வந்து சேர்ந்தனர். (யோ)

**மக்களின்**

கின்றன.

இக்கப்பலை மீளப்பெற்றுக் கொள்வது தொடர்பாக அர சாங்க அதிகாரிகள் அத்தியா வசிய ஆணையாளர் ஊடாக கடற்படையினருடன் தொட ர்பு கொண்ட போதும் அதனை மீளளிக்க கடற்படை யினர் மறுப்பு தெரிவித்து வருகின்றனர், (88, நி)

**ஜனாதிபதியாக**

அரசாங்கம் சமாதானம் காணும் முயற்சியில் அரசா ங்கததின் கஷ்டங்களை தான் உணர்ந்திருப்பதாக காமினி தெரிவித்தார்.

ஜனாதிபதியாக தான் தெரிவு செய்யப்பட்டால் அர சாங்கம் மோசடி, ஒழுங்கீனத் தை ஒழிக்க எடுக்கும் நடவ டிக்கைகளுக்கு நூறு சதவீத ஆதரவு தர தயாராக இருப் பதாகவும் அவர் கூறினார்.

நிறுத்தம் என்ற ஒன்று வரும் போது தமிழீழ விடுதலைப்

**யாழ்**

செல்வதற்கு பயணி ஒருவரி டமிருந்து நூறு ரூபா அற வீடு செய்யும் அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து திருமலை செல்வதற்கு பயணி ஒருவரிடமிருந்து ஐந்நூறுரூபா அறவிடப்படுவதாக தெரிவிக் கப்படுகிறது. (நி)(88)

**சந்திரசேகரன்**

ஏற்கனவே போதிய அவகாசம் வழங்கப்பட்டுவிட்டது எனக் கூறியே தாம் எதிர்வரும் 7-ம் திகதி வழக்கு மீது தீர்ப்பு வழ ங்கப் போவதாக தெரிவித் தார்,

சந்திரசேகரன் 1991ஆம் ஆண்டு ஜே-ஓ-சி குண்டுவெடி ப்பு சம்பவத்துடன் தொடர் புடையவர் என வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்-

**சிறில்**

னர்

முன்னாள் சக்திபீக்க பெண் ஒருவரின் சகோதரர் இவ் வாறு 14 வருடங்கள் வெளி நாட்டு தூதரகம் ஒன்றில் பணிபுரிவதாகவும் முன்னாள் முதல்தர ஆலோசகர் ஒரு வரின் மகன் ஒருவரும் இவ் வாறு உயர்பதவியில் தொடர் ந்து நீடிப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது

எவ்வாறு அமையும்?

பதில்: புலிகளுடனான பேச்சு வார்த்தை என்னும் போது சகல சக்திகளையும் உள்ளடக்கியதா? அல்லது அரசும் புலிகளும் தனித்து பேசப்போகின்றார்களா என் பதைப்பொறுத்த விடயம். புலிகள்-அரசின் பேச்சுவார்த் தை இரகசியப் பேச்சுவார்த் தைகளாக இருக்கக்கூடாது. அதற்கு நாம் எந்தவிதமான இடையூறுமின்றி வரவேற் போம். எம்மை அழைத்தால் நாமும் சேர்ந்து நின்று ஆக் கபூர்வமான வழிகளில் அவர் களுக்கு நாம் உதவுவோம். தமிழ் மக்களின் அடிப்ப டைப் பிரச்சினைகள் தீர்க்கப் படல்வேண்டும். அரசு தீர்வு ஒன்றை புலிகளுக்காகவோ புளொட்டுக்காகவோ வைக் கப்போவதில்லை. அது தமிழ் மக்களின் அபிலாசைகளைப்

**பாடசாலை**

களை போக்குவதற்காக 1995இற்குதேவையான பாட நூல்கள் எதிர்வரும் ஜனவரி 31க்கு முன் அனுப்பி வைக்க நடவடிக்கைஎடுக்கப்படும்என் றார், க. பொ. த. உயர்தர, சாதாரணபாடங்களில் உடன டியாகமாற்றம்எதுவும்இராது ஆனால் கல்விச் சேவை ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் வரலாறு, இலக்கியம் ஆகிய பாடங்கள் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

யும் தவிர்க்க முடியாது.

கேள்வி: கடந்த ஆண்டு ஐ. தே. கட்சியை ஆத ரித்த நீங்கள் இந்தத்தடவை பொதுஜன ஐக்கிய முன்னணி யை ஆதரித்து நிற்பது ஏன்?

பதில்: அன்று இருந்த சூழ் நிலையில்ஐ தே கவை ஆதரித்தோம் ஐ. தே. கட்சி காலத்தில்தலைவராகஇருந்த முன்னாள் ஜனாதிபதி பிரே மதாசா இனப்பிரச்சினை யைத் தீர்ப்பதாக உறுதியளி த்திருந்தார் சிங்கள மக்கள் இனவாதத்தை எதிர் த்து தமிழ் மக்களுடன் ஐக் கியமாக வாழ வேண்டும் அவ ர்களுக்குரிய உரிமைகள் வழங் கப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் அதற்கான அங்கீகாரத்தை புதிய அரசு க்கு வழங்கியுள்ளனர் அதற் காகநாமும்ஆதரிக்கின்றோம்.

கேள்வி; இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான தங்கள் கட்சியின் நிலைப் பாடு என்ன?

பதில்: தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் சுவிஸ் கண்டன் முறையால் பிரச்சி னையை சுலபமாக தீர்க்க லாம் அது குறித்து பரிசீலிக்க வேண்டும்.

## மரண அறிவித்தல்

### வடிவேலு மேனகேஸ்வரி (மேனகா)

(மயிலிட்டி, கொத்தாவத்தை, அளவெட்டி)

வடிவேலு மேனகேஸ்வரி 6-9-94 அன்று இந்தியா வில் காலமானார். இவர் வடிவேலுவின் அன்பு மனைவி யும், சிவகரன் (லண்டன்), ஜெயகரன் (இந்தியா) ஆகி யோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி, நகுலேஸ் வரி, காலஞ்சென்ற தங்கவடிவேலு, இராஜகோபால் (இந்தியா), சந்திரேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோ ரின் சகோதரியும், மகாலிங்கம், வேலாயுதம், காலஞ் சென்ற தர்மலிங்கம், சிவலிங்கம், காலஞ்சென்ற இரா ஜரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நாகராசா, சந்திரேஸ்வரி (சந்திரா)

ஐந்து சந்தி,
மாவடி றோட்,
யாழ்ப்பாணம்.

(சி-10323)

யாழ். ஸ்ரீதரில்
தினசரி காலை 10.30, மாலை 6.00
WAY OF THE DRAGON
[கராட்டி]
16-09-1994 வெள்ளி முதல்
RAMBO III
(தாக்குதல் சித்திரம்)
தினசரி 10.30, 4.00, 6.00

தினசரி மாலை 4-00 மணிக்கு மட்டும்
CIRCUS
இதனுடன்
BIG BOSS படத்திலிருந்து புறூஸ்லீ யின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும், RAMBO படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

ஃ பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்புகொண்டால் காட்சிநேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.
(சி-10230)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது